பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 21 செவ்வாய்க்கிழமை (06.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 10

# புலிகள் - இராணுவத்தினர் சந்திப்பு நேற்றுக் கடைசி நேரத்தில் இரத்து

## முகமாலையில் காத்திருந்த போராளிகள் படைத்தரப்பினர் வராததால் திரும்பினர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 6

**யாழ். குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் பதற்றநிலை மற்றும் போர்ச் சூழல் ஆகியவற்றைத் தவிர்த்து, நிலைமையைத் தணிக்கச் செய்வதற்காக இராணுவ உயரதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முகமாலையில் - அரச மற்றும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட யுத்த சூனியப் பிரதேசத்தில் - நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச்செய்யப்பட்டது. இந்தச் சந்திப்பில் பங்குபற்றுவதற்காக முகமாலையில் தமது கட்டுப்பாட்டு எல்லைப் பிரதேசம் வரை வந்து காத்திருந்த புலிகளின் பிரதிநிதிகள் சந்திப்பு இடம்பெறாது எனத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து திரும்பிச் சென்றனர்.**

நேற்றுமுன்தினம் மாலை பளையில் விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி. இளம்பரிதியை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

தற்போது, யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டிருக்கும் பதற்ற சூழ்நிலையைத் தவிர்க்கும் நோக்கில் குடாநாட்டில் இராணுவ உயர் அதிகாரிகளுக்கும், புலிகளின் பிரமுகர்களுக்கும் இடையில் உயர்மட்டச் சந்திப்பொன்றை ஏற்படுத்தும் யோசனையை அப்போது கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

இந்த யோசனை குறித்துத் தமது தலைமைப் பீடத்துடன் கலந்தாலோசனை செய்து முடிவை தாம் அறிவிப்பார் என இளம்பரிதி அப்போது குறிப்பிட்டார் என்று தெரிகிறது.

அதன்படி, அச்சந்திப்புக்குத் தயார் என்ற தகவலை புலிகள், கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரிவித்தனர். இச்சந்திப்பு நேற்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முகமாலை

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஞானக்கோன் விடுதலை

கொழும்பு, டிசெ.6

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த கோடீஸ்வர வயோதிபர் சாள்ஸ் ஞானக்கோனை விடுதலை செய்யும்படி சட்டமா அதிபர் பணித்திருக்கிறார்.

இத்தகவல் நேற்று பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஜயந்த ஜயசூரியவினால் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து நேற்றுமாலை ஞானக்கோன் விடுதலையானார். தடுப்புக் காவலில் இருந்த சமயம் நெஞ்சுவலிக்கு உள்ளான ஞானக்கோன் அதன் காரணமாகத் தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு வைத்து அவர் விடுவிக்கப்பட்டார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

ஹாட்லி, மெதடிஸ்த மாணவர் போராட்டம்: படங்கள், செய்திகள் 11 ஆம் பக்கத்தில்.

## சிங்கள மாணவர்கள் தென் பல்கலைகளுக்கு இடம்மாற முயற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.6

யுத்தம் மூழக்கூடும் என்ற அச்சம் காரணமாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் கல்விகற்கும் சிங்கள மாணவர்கள் தென்பகுதிப் பல்கலைக்கழகங்களுக்கு இடம்மாற்றம் பெறுவதற்கான முயற்களில் ஈடுபட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான அழுத்தங்களை அரச தரப்புக்குக் கொடுத்து அனுமதியைப் பெறும் முகமாக அவர்களில் பெரும்பாலானவர்கள் இன்று தென்னிலங்கைக்குப் புறப்படத் திட்டமிட்டிருந்தனர் என்று கூறப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹாட்லி மாணவர் மீதான தாக்குதலின் எதிரொலி

## ராணுவ விலகலுக்கு இன்று மாலைவரை அவகாசம்; இல்லாவிட்டால் நாளைமுதல் தொடர் போராட்டம்!

பாடசாலைகளை ஆக்கிரமித்து, அண்மித்திருக்கும் இராணுவ முகாம்கள் காவலரண்கள் அகற்றப்படவேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஹாட்லிக்கல்லூரி மாணவர்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட தாக்குதலைத் தமிழ் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

மாணவர்களின் கோரிக்கையை மேலும் வலியுறுத்தியும் பொலீஸாரின் தாக்குதலைக் கண்டித்தும் இன்று வடமராட்சியில் உள்ள சகல பாடசாலை மாணவர்களையும் இணைத்துப் போராட்டம் நடத்தப்படும் என்றும்,

இந்த விடயத்தில் இன்று மாலைக்கிடையில் சரியான பதில் கிடைக்காத பட்சத்தில் மாணவரின் போராட்டம் குடாநாடு தழுவிய ரீதியில் விஸ்தரிக்கப்படும் என்றும் - தமிழ் மாணவர் ஒன்றியம் அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமைதியாக ஆர்ப்பாட்டம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. நாடாளுமன்றக் குழு இன்று மாலை கூடுகின்றது

### ரணிலின் தலைமை குறித்தும் முடிவு?

கொழும்பு, டிசெ.6

கட்சித் தலைமைப்பதவி தொடர்பான சர்ச்சை தீவிரமடைந்திருக்கும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று மாலை நடைபெறவுள்ளது.

கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், கட்சிக்குள் எழுந்திருக்கும் முரண்பாடான நிலை குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்ததையடுத்து அவர் கட்சித் தலைமைப்பதவியிலிருந்து விலகவேண்டுமென ஒரு சாராரும்-

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஆளும் கட்சியின் கூட்டமும் இன்று

ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டமும் இன்று மாலை நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், ஆளுங்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் வரவு - செலவுத்திட்டம், ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரை மீதான நாடாளுமன்ற விவாதம் உட்படப் பல விடயங்கள் இன்றைய கூட்டத்தின்போது ஆராயப்படவுள்ளன.

இதற்கிடையில் அரச வரவு - செலவுத் திட்ட விவாதங்கள் முடியும் வரை ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வெளிநாட்டுப் பயணங்களை வரையறுத்துக் கொள்ளவேண்டுமென ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.(க)

### உயர் பாதுகாப்பு வலய வழக்கு

## மாற்று ஏற்பாடு குறித்து அறிக்கைதர யாழ். அரச அதிபருக்குப் பணிப்பு

### உயர் நீதிமன்றம் விடுத்தது

கொழும்பு,டிசெ.6

அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை அங்கு அல்லது வேறு இடத்தில் மீளக்குடியமர்த்துவதற்கான வாய்ப்புகள் குறித்து முழுமையான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தங்களின் காணிகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் தமது நிலைகளை பலப்படுத்துகின்றனர் படையினர்

### தாக்குதல்கள் தீவிரமாகியிருப்பதை அடுத்து

யாழ்ப்பாணம், டிசெ.6

குடாநாட்டில் இராணுவத்தினர் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து படையினரும் வீதிச்சோதனை, ரோந்து மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

அண்மை நாள்களாக வீதியில் பயணம் செய்யும் இராணுவ வாகனங்கள் இனம் தெரியாதோரின் குண்டுத்தாக்குதல்களுக்கு இலக்காவதுடன் இராணுவச் சிப்பாய்களை இலக்கு வைத்துத் துப்பாக்கிச்சூடும் மேற்

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்





குடாநாட்டில் நிலவும் ப... நிலையை த...கும் நடவடிக்கையாக விடு...லைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே முகமாலையில் கண்காணிப்புக் குழுவினரால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் படையினர் சமூகமளிக்காததால் நடைபெறவில்லை.

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளரை கண்காணிப்புக் குழுவினர் சந்தித்தனர்.

கண்காணிப்புக்குழுவினர் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளருடன் உரையாடுவதையும், பின்னர் அவர்கள் யாழ். நகர் திரும்பப் புறப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பிரபா)

# சுழற்சி முறையில் மின்துண்டிப்பு அமுலில் என்கிறது மின்சாரசபை

## 'கூல் எயார்' மின்பிறப்பாக்கி பழுதடைந்ததை அடுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ். மாவட்டத்தில் சுழற்சி முறையில் மின்வெட்டு அமுல் செய்யப்பட்டுவருவதாக மின்சாரசபை வட்டாரங்கள் நேற்று தகவல் வெளியிட்டன.

மின்சாரத்தை வழங்கிவரும் 'கூல் எயார்' நிறுவனத்தின் மின் பிறப்பாக்கிகளில் ஒன்றில் திருத்தவேலைகள் இடம்பெற்றுவருவதாலேயே இந்த மின்வெட்டு தற்காலிகமாக அமுல் செய்யப்பட்டுவருவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சீரற்ற மின்விநியோகம் தொடர்பாக பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைத்திருப்பது தொடர்பாக மின்சாரசபையின் வடபிராந்திய அலுவலக அதிகாரி ஒருவரிடம் கேட்டபோதே இந்தத் தகவல்கள் தெரியவந்தன.

'கூல் எயார்' நிறுவனத்தின் மின் பிறப்பாக்கிகளில் ஒன்று பழுதடைந்துவிட்டதால் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான மின்விநியோகத்தை மேற்கொள்வதற்குத் தேவையான வலுவுள்ள மின்சாரத்தைப் பெறமுடியாத நிலை சில தினங்களாக நீடிக்கிறது என்றும் -

இதனால், தினமும் ஒவ்வொரு பிரதேசத்தில் குறிப்பிட்ட நேரத்துக்கு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுவருகிறது. இந்த மின் துண்டிப்பு கால ஒழுங்கு பற்றி பாவனையாளர்களுக்கு பத்திரிகை வாயிலாக முறைப்படி அறிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டள்ளது எனவும் -

அந்த அதிகாரி தகவல் தந்தார். (ஐ-12)

## வீதி விபத்தில் ஒருவர் பலி!

தென்மராட்சி,டிசெ.6

மட்டுவில்தெற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வான் - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் உயிரிழந்தார்.

மீசாலை மேற்கைச் சேர்ந்த கந்தையா சிவராசா (வயது 33) என்பவரே மரணமானவராவார்.

விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த இவர், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவர் மரணமானார்.

வான் சாரதியை சாவகச்சேரி பொலீஸார் கைதுசெய்து நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (ஒ-117)

## சுந்தர ராமசாமி நினைவு நிகழ்வு

- யாழ்ப்பாணம்,டிசெ.6

படைப்பாளியும் விமர்சகருமான சுந்தர ராமசாமியின் நினைவு நிகழ்வு நாளை புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழகப் புவியியல்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில் கலாநிதி ம.இரகுநாதன், எழுத்தாளர்கள் க.சட்டநாதன், அ.யேசுராசா ஆகியோர் நினைவுரையாற்றவுள்ளனர்.

கடந்தமாதம் 30 ஆம் திகதி நடைபெறவிருந்த இந்த நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டு நாளை இடம் பெறவுள்ளது. (ஒ-117)

## ஹாட்லி அருகே காவலரண்மீது கிரனேட் வீச்சு!

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முன்பாக உள்ள காவலரண் மீது நேற்றிரவு 9.15 மணியளவில் இனந்தெரியாதவர்களால் கைக்குண்டு வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீசப்பட்ட கைக்குண்டு காவலரண் அருகே வீழ்ந்து வெடித்ததாகவும் - இதில் ஏற்பட்ட சேதம் குறித்த விவரங்களை உடன் அறியமுடியவில்லை என்றும் - வடமராட்சித் தகவல்கள் தெரிவித்தன. (ஒ-15)

## பதிவுச்சான்றிதழ் பெற தென்மராட்சியில் தனிப்பிரிவு அமைப்பு

தென்மராட்சி பிரதேச மக்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அடுத்தவாரம் தொடக்கம் தமது பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு போன்ற சான்றிதழ்களைப் பெறமுடியும்.

இப்பதிவுகளை வழங்குவதற்கென பிரதேச செயலகத்தில் தனிப்பிரிவு ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலக மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகத்திலிருந்து உரிய ஆவணங்கள் இவ்வாரம் வந்து சேருமெனவும் அடுத்தவாரம் தொடக்கம் சான்றிதழ்களைப் பெறமுடியுமெனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## குளத்தில் குளித்த இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம்,டிசெ.6

கொழும்புத்துறை, உப்புக்குளத்தில் நண்பர்களுடன் குளித்துக்கொண்டிருந்த இளைஞர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று நண்பகல் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் பரந்தனைச் சேர்ந்த பாலேந்திரன் பிரதீபன் (வயது 19) என்ற இளைஞரே உயிரிழந்தவர் ஆவார்.

இவர் தமது கல்வியைத் தொடர்வதற்காக ஈச்சமோட்டையில் உள்ள உறவினரின் வீட்டில் தங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் மரண விசாரணை, பிரேத பரிசோதனை என்பவற்றின் பொருட்டு, யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-12-14-15-190)

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட அல்வாய் வட மத்தி, குடத்தனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 56 குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அல்வாய் வடமத்தியில் இரட்சணிய சேனையினரால் அமைக்கப்பட்ட 20 வீடுகளும் குடத்தனையில் மூவிமெண்டோ நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 36 வீடுகளுமே கையளிக்கப்படவுள்ளன.

இரட்சணிய சேவையினரால் அமைக்கப்பட்ட வீடுகளை கையளிக்கும் நிகழ்வு முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொள்வார். அத்துடன், மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், ஆழிப்பேரலை அனர்த்த பிரச்சினைகளைக் கையாளும் மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் உட்படப் பலர் கலந்துகொள்வர்.

மூவிமெண்டோ நிறுவனத்தினால் குடத்தனையில் அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு 13ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ், மருதங்கேணி உதவி அரச அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆகியோர் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொள்வர். (ஒ-203-204)

# கோப்பாய், பலாலி கலாசாலைகளின் மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதிப்பு!

## மட்டு. கலாசாலை மாணவருக்கு ஆதரவாக

யாழ்ப்பாணம்,டிசெ.6

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவர்கள் மேற்கொண்டுவரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளின் ஆசிரிய மாணவர்கள் நேற்றுமுதல் தொடர் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் மாவீரர் தின ஏற்பாடுகளின் போது அமைக்கப்பட்ட பந்தல்கள், சோடனைகள் அறுத்துச் சேதமாக்கப்பட்டதுடன், மாணவர்களும் அச்சுறுத்தப்பட்டனர்.

இந்த அத்துமீறலைக் கண்டித்தும் தமக்குரிய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரியும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவர்கள் தொடர்ச்சியாகப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் நேற்றுமுதல் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், அன்றையதினம் இடம்பெற்ற ஹர்த்தாலினால் அது இடம்பெறவில்லை. நேற்றைய தினமே ஆசிரியர்கள் முழுமையாக விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

ஆசிரிய மாணவர்களின் இப்போராட்டத்தால் கலாசாலைகளில் நடைபெறவிருந்த அரையாண்டுப் பரீட்சைகள் எவையும் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றம் நேற்றுமாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில் கலாசாலை ஆசிரிய மாணவர்களின் வருட இறுதிப் பரீட்சைகள் நடைபெறுகின்ற காலத்தில் இவ்வாறு மாணவர்கள் அச்சுறுத்தப்படுவது ஆசிரிய மாணவர்களிடம் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஆசிரியர் சமூகத்தின் பாதுகாப்பிற்கு உத்தரவாதமும் உறுதிமொழியும் சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து கிடைக்கும் வரை தொடர்ந்து மட்டக்களப்பு ஆசிரியர் மாணவர்கள் மேற்கொள்ளும் பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி எமது சகல செயற்பாடுகளையும் நிறுத்துவது என தீர்மானித்துள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-6)

## நீர்வேலியில் பலியான இளைஞரின் இறுதிச்சடங்கு

நீர்வேலிப் பகுதியில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவரான கு. கிருஷ்ணகுமாரின் இறுதிக்கிரியை நேற்று இடம்பெற்றது. இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்த இறுதிக்கிரியை நிகழ்வையொட்டி நீர்வேலிப் பகுதியில் நேற்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (ஒ-72-139)



பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபடும்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

ஆசிரிய மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதனையும் கலாசாலை வாயில் இழுத்து மூடப்பட்டு அதில் சுலோக அட்டைகள் தொங்கவிடப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- வசந்தன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஒரு நிழல் யுத்தம் நிஜ யுத்தமாகின்றது

கிழக்கு மாகாணத்தில் - தென் தமிழீழத்தில் - இதுவரை நிலவிய பதற்ற சூழ்நிலை மெல்ல வடக்கேயும், யாழ். குடா நாட்டிலும் பரவி வருகின்றது.

யுத்த நிறுத்த சமயத்தில் கிழக்கில் புலிகளின் பலத்தையும், ஸ்திரத்தையும் உடைக்கும் நோக்கில் ஒரு நிழல் யுத்தம் அரச படைகளின் புலனாய்வுத் துறையினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது குறித்து இப்பத்தியில் பலதடவைகள் குறிப்பிட்டிருந்தோம். அதே உத்தியை வடக்குக்கும் விஸ்தரித்து அங்கும் விடுதலைப் புலிகளின் உறுதியான பலத்தை உடைக்கும் திட்டத்தில் புலனாய்வுப் பிரிவும், ஒட்டுப்படைகளும் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன என்று எச்சரித்தோம். அந்த மறைமுக சதி முயற்சிகளின் எதிர்விளைவுகள் இப்போது வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன. அந்த விளைவுகளின் விபரீதம் விதைத்தவர்களை வினையாகப் பற்றிப் பிடித்துத் தொல்லைதரத் தொடங்கியிருக்கின்றது. அதுதான் இன்றையகள யதார்த்தம். அது இன்னும் 'சூடு' பிடிக்கலாம்.

சமாதானத் திரைக்குப் பின்னால் மறைமுகமாக, புலிகள் இயக்கத்துக்கு எதிராக நடத்தப்படும் இந்த இரகசிய யுத்தம் பற்றித் தலைவர் வே.பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, விடுதலைப் போராட்டத்துக்குப் பங்கம் விளைவிக்கும் நோக்குடன் இந்த நாசகார யுத்தம் ஏவிவிடப்பட்டிருப்பதைத் தலைவர் வே.பிரபாகரன் அம்பலப்படுத்தியிருந்தார்.

''எமது இயக்கத்தின் மூத்த உறுப்பினர்கள், முக்கிய போராளிகள், ஆதரவாளர்கள், எமக்கு ஆதரவான அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் என்ற வகையில் பெருந்தொகையானோர் மிகவும் கோழைத்தனமாகக் கொன்றொழிக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிழல் யுத்தத்தின் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பது எமக்கு மிகவும் நன்கு தெரியும். இராணுவப் புலனாய்வுத் துறையின் வழி நடத்துதலில் இந்த வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்ற போதும் இதன் பின்புலத்தில் சிங்கள இனவாத அரசியல்வாதிகளின் அரூப கரங்கள் செயற்படுவதையும் நாம் அறிவோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில், அரச படையினரின் பாதுகாப்புக் கவசத்துடன் ஒட்டுப்படைகளான தமிழ் ஆயுதக் குழுக்களைக் கருவிகளாகக் கொண்டு இந்த மறைமுக யுத்தம் நடத்தப்படுகிறது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிராயுதபாணிகளாக நின்று அரசியற் பணிகளில் ஈடுபட்ட எமது போராளிகள் கொலை செய்யப்படுவதையும், எமது அரசியல் செயலகங்கள் தாக்கி அழிக்கப்படுவதையும் நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். சிங்கள அரசு எமது ஆட்சேபனைகளைப் பொருட்படுத்தவில்லை. இதனால், இறுதியில் எமது அரசியல் போராளிகளை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் மீள அழைக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

''போருக்கு ஓய்வு கொடுத்ததால் உருவாகிய சமாதானச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி ஒருவித்தியாசமான மென் தீவிர யுத்தம் எம்மீது தொடுக்கப்பட்டிருக்கின்றது. போர் நிறுத்த விதிகளுக்கு அமைய தமிழ்க் கூலிப்படைகளின் ஆயுதங்களைக் களைய வேண்டியது அரசின் கடப்பாடு. இந்த முக்கிய கடப்பாட்டை நிறைவு செய்யத் தவறிய சிங்கள அரசு, இந்த ஆயுதக் குழுக்களையே கருவியாகப் பயன்படுத்தி எமது விடுதலை இயக்கத்திற்கு எதிராக வன்முறையை ஏவிவிட்டிருப்பது ஒரு பாரதூரமான போர்க்குற்றமாகும். ஒரு கையால் அரவணைப்பது போல நடித்து மறுகையால் குத்தும் நம்பிக்கைத் துரோகச் செயலிது......

*''..... சமாதானச் சூழலிலும் ஒரு புதிய வடிவில் போரை உருமாற்றம் செய்து இராணுவப் பயங்கரவாதத்தைத் தொடர்கிறது சிங்கள அரசு. இந்த நிழல் யுத்தத்தின் நிஜவடிவத்தையும் அதன் அசிங்கமான முகத்தையும் சர்வதேச சமூகம் கண்டு கொள்ளும் என நம்புகின்றோம்......''* - என்று தெரிவித்திருந்தார் பிரபாகரன்.

அந்த நிழல் யுத்தம் நிஜ யுத்தமாக மாறும் ஆபத்தை ஏற்படுத்தியிருப்பதையே குடாநாட்டு நிலைமை எடுத்துக்காட்டுகின்றது.

அமைதி வழியில் - பேச்சு மூலம் - சுமுக முறையில் - ஒரு சமாதானத் தீர்வு கிட்ட வேண்டுமானால், அந்த முடிவின் இறுதியில் இப்போது தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கான அரசியல், இராணுவ இயக்கமான புலிகள் அமைப்பு, தனித்து ஓர் அரசியல் இயக்கமாக உருமாற்றப்படவேண்டும். அமைதி முயற்சிகளோடு சேர்ந்து இடம்பெற வேண்டிய செயற்பாடு இது.

அதற்கு, அரச கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதியிலும் புலிகளின் அரசியல் செயற்பாடு தங்கு தடையின்றி மேற்கொள்ள அனுமதிக்கப்படுவது அவசியம். தற்போதைய தீர்வு முயற்சிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட அனைவருமே இதனை ஏற்றுக் கொள்வர்.

ஆனால், அரசுத் தரப்பினால் ஏவிவிடப்பட்டிருக்கும் நிழல் யுத்தம் இந்த அரசியல் செயற்பாட்டுக்குக் குந்தகமாகி அதைக் குழப்பி விட்டுவிட்டது. அதனால், பெரும் பாதிப்பு அமைதி முயற்சிகளுக்குத்தான்.

இந்த நிழல் யுத்தத்தின் பின்னணியில் அரூபகரங்களாகச் செயற்படுபவர்கள் எனத் தலைவர் பிரபாகரனினால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் சிங்கள இனவாத அரசியல்வாதிகளே இந்த நிழல் யுத்தம், நிஜ யுத்தமாக மாறினால் அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

நிழல் யுத்தம் தீவிரமடையும்போது அது நிஜ யுத்தமாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாமல் போகும். இந்த மெய்மை நிலையை உணரத் தவறியவர்களுக்கு இப்போதாவது விபரீதம் புரிய ஆரம்பித்தால் சரி. இப்போதும் அவர்கள் தம்மைத் திருத்திக் கொள்ளாவிட்டால் இனித் திருந்தவே வாய்ப்பிருக்காது.

# தரம் - 9 மாணவர்களுக்கு சிங்கள மொழி வினாத்தாள்

## விடை எழுதத் தெரியாமல் அவர்கள் திண்டாட்டம்

அச்சுவேலி,டிசெ.6

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்படும் 9 ஆம் தரத்திற்கான பொதுப்பரீட்சையில் இரண்டாம் மொழி (சிங்களம்) பாடத்திற்கும் முதல் முறையாக மாணவர்கள் இம்முறை தோற்ற வேண்டிய 'புதுமை' நிகழ்ந்துள்ளது.

ஆண்டுதோறும் 9ஆம் தர மாணவர்களுக்கான ஆண்டிறுதிப்பரீட்சை மாகாண மட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணமட்டத்தில் நடைபெறும் இந்தப் பரீட்சையை வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்துகின்றது.

இந்த வருடத்திற்கான பரீட்சை தற்பொழுது நடைபெறுகின்றது. கடந்த புதன்கிழமை இரண்டாம் மொழி (சிங்களம்) வினாப்பத்திரம் பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்டன.

வினாத்தாளைப் பார்த்ததும் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

கற்பிக்காத பாடத்தை, எதுவுமே தெரியாத விடயத்தை எப்படி எழுதுவது? என்று ஆசிரியர்களிடம் கேள்வி எழுப்பினர்.

இரண்டு மணிநேரம் விடை எழுதவேண்டிய சிங்கள வினாப்பத்திரமே மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

கடந்த வருடங்களில் இரண்டாம் மொழி வினாப்பத்திரம் தமிழ்மொழிப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-11)

# மருத்துவபீட இறுதி ஆண்டுப் பரீட்சை சித்தியடைந்தோர் விவரம் வெளியானது

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் எம்.பி.பி.எஸ். இறுதித் தேர்வில் சித்தியடைந்தோரின் பெயர் விவரங்களை பல்கலைக்கழக பரீட்சைகள் அலகு வெளியிட்டுள்ளது.

சித்தியடைந்தவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

**முதலாம் தர சித்தி**

எ.ராஜசுதர்சன் (அதி சிறப்புச் சித்தி, அறுவைச்சிகிச்சை, மகப்பேறும் பெண் நோயியலும்).

**இரண்டாம் தர சித்தி (மேற்பிரிவு)**

ரி.அனோஜா, ரி.பாலமுருகன், எஸ்.பிரமிளா, எ.சங்கீதா, ரி.தெய்வாம்பிகை (அதி சிறப்புச் சித்தி- மகப்பேறும் பெண் நோயியலும்), திருமதி ஜி.யாழினி (அதி சிறப்புச் சித்தி- குழந்தை வைத்தியமும் பெண்நோயியலும்) எஸ்.திலகம்.

**இரண்டாம் தர சித்தி (கீழ்ப்பிரிவு)**

ரி.பாமின், வி.பிருந்தா, ஜே.ஜோர்ஜ் ரஜீவன் பிரான்சிஸ், எஸ்.ஜனாலணி, எஸ்.யசிந்தா, ரி.ஜெயந்தி, ரி.காண்டீபன், திருமதி எம்.கீர்த்திகா எஸ்.மதிவாணன், பி.நிரஞ்சினி, சி.நொரிஸ், ஆர்.ராஜவர்மன், ஆர்.ராம்பிரசாத், பி.சஜீவன், எஸ்.சசிகரன், எம்.சுதர்சனா, ஆர்.செந்திரு, திருமதி ஜே.சிராந்தினி, எஸ்.சுதர்சினி, ரி.தர்மிலா, பி.திரிபுவனசுந்தரி, என்.உமா, எஸ்.வைதேகி, எஸ்.யாழினி, ஆர். மாளவன், எம்.மஞ்சுதா, பி.மைதிலி, எம்.முகுந்தன், எஸ்.சசிகரன்.

**சாதாரண சித்தி**

ரி.பாலமுரளி, வி.வபந்தன், ஆர்.சந்திரவதனி, ஜே.எவ்.டாரியஸ் மரியான், எஸ்.கணேஸ்குமார், ஆர்.காயத்திரி, எஸ்.கமலகுமார், கே.கதிர்காமநாதன், ரி.கிரிதரன், பி.கிருஷாந்தன், கே.கோமகராஜா, எம்.லக்ஸ்மன், ஜே.போர்ட்ஸ் யஸ்மிர், எஸ்.நளாயினி, ரி.நந்தகுமார் ஆர்.பிருந்தா, ரி.பிரமிளா, கே.ரூபதர்சினி, பி.சசிகலா, எஸ்.சைந்தன், பி.செந்தூரன், ஆர்.ஷமிலா, வை.சிவகர, எஸ்.சிவநாதன், எஸ்.சிவகௌரி, எஸ்.சிறிகாந்தன், எஸ்.சிவரஞ்சனி, எஸ்.சிவசக்தி, திருமதி எஸ்.சுஜாதா, பி.சுரேஸ், எ.சுசிலா, எஸ்.தயாநிதி, பி.ரி.ரொனி சஞ்சீவ், கே.யாழினி, பி.ஆனந்தி, ஆர்.தெனுசன், எஸ்.நிரஞ்சலா, பி.பரணீதரன், கே.செந்தூர்பதிராஜா, ரி.சுவேந்திரன், ரி.நிஷாந்தன், எ.எல்.மொஹமட் ஆனாஸ். (ஐ-12-202)

# ஊடகவியல் டிப்ளோமா கற்கைநெறி: தகுதி காரணமாகப் பலர் வாய்ப்பு இழப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6

யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தினால் நடத்தப்படவிருக்கும் பத்திரிகையியல் டிப்ளோமா முழுநேரக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போருக்கு விதிக்கப்பட்டிருக்கும் தகுதி காரணமாக ஊடகத்துறையில் ஆர்வமுள்ள பலர் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

வெளிநாட்டு நிதி உதவியுடன் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஊடகவளங்கள் பயிற்சி நிலையம் முதல் முறையாக முழுநேரப் பத்திரிகையியல் டிப்ளோமா பயிற்சி நெறியை ஆரம்பிக்க உள்ளது. இதற்கான விண்ணப்பங்களை யாழ். பல்கலைக்கழகம் கோரியுள்ளது.

இந்த முழுநேரப் பத்திரிகையியல் கற்கை நெறிக்கு 2004, 2005ஆம் ஆண்டுகளில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிபந்தனை காரணமாக இந்தப் பயிற்சிநெறியைத் தொடர்வதற்காகக் காத்திருந்த ஊடகவியலாளர்களும் ஏனையோரும் பெரும் ஏமாற்றமடைந்திருக்கின்றனர்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆண்டுகள் காரணமாக தாங்கள் பலர் விண்ணப்பிக்கும் வாய்ப்பை இழக்க நேர்ந்திருப்பதாக ஊடகவியல் துறையில் நாட்டம் உள்ள பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது ஊடகவியலாளர்களாகத் தொழில் புரிவோரும், இத்துறையில் கல்வி வாய்ப்புக்களுக்காகக் காத்திருப்போரும் அனேகர் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். இத்தகையோருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் விண்ணப்பதாரிகளின் தகுதிகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டோர் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறை சார் கற்கைநெறிகளைப் பயிலக்கூடிய வாய்ப்பு இப்போதுதான் முதல்முறையாகக் கிட்டியுள்ள நிலையில் இக் கற்கைநெறிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான நிபந்தனைகள்,தகுதிகள், கட்டணங்கள் தளர்த்தப்பட்டுச் சகலருக்கும் வாய்ப்பளிக்கக் கூடிய வசதிகளை ஊடகவளங்கள் பயிற்சி நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பொலீஸ் நிலையங்களின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துமாறு உத்தரவு

யாழ்ப்பாணம்,டிசெ.6

குடாநாட்டில் படையினர் மற்றும் பொலீஸார் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலீஸ் நிலையங்களின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்குமாறு பொலீஸ் தலைமைப் பீடத்திலிருந்தும், பாதுகாப்பு அமைச்சிலிருந்தும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்ததையடுத்து சகல பொலீஸ் நிலையங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு பொலீஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் உத்தரவிட்டிருக்கின்றனர் என்று தெரியவருகின்றது.

இந்தப் பணிப்புரையை அடுத்து அனைத்துப் பொலீஸ் நிலையங்களிலும் தேவையான பாதுகாப்பு முன்னேற்பாடுகளைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். பொலீஸ் நிலையங்களின் முன்னரங்க நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை -

பொலீஸார் மற்றும் படையினர் மீது தாக்குதல் நடத்துவோர் மீது உடனடியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதற்கும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன், வீதிகளில் பயணம் செய்யும் பொலீஸ் வாகனங்களிலும் பொலீஸாருடன் இராணுவத்தினரும் பயணம் செய்கின்றனர். (ஐ-8-7)

## நாளை

கார்த்திகை 22
புதன்கிழமை
07.12.2005
திதி: ஷஷ்டி
முற்பகல் : 09.48வரை
நட்சத்திரம் : அவிட்டம்
பிற்பகல் : 03.54 வரை
சுபநேரம்: 04.47- 06.17
ராகுகாலம்:12.17 - 01.47
(யாவும் பழைய நேரப்படி)

# பதற்றநிலை நீடிப்பதால் நீர்வேலி மக்கள் பீதியில்

அரியாலை,டிசெ.6

அடுத்துதடுத்து இடம்பெற்றுவரும் அசம்பாவிதச் சம்பவங்களால் நீர்வேலிப் பகுதியில் தொடர்ந்து பதற்றம் நீடிக்கிறது.

நேற்றுமுன்தினம் மாலை அத்தியார் இந்துக் கல்லூரிப் பகுதியில் சிப்பாய் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சம்பவத்தை அடுத்துப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தால் அங்கு வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்களுக்கு சேதங்கள் ஏற்பட்டன.

வலி.கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் லொறி ஒன்றுக்கும் சிறு சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

நீர்வேலிப் பகுதியில் வீதிகளில் படையினரின் ரோந்து அதிகரித்துள்ளது. நேற்றுக்காலை வீதிகளுக்கு வந்த சிலர் படையினரால் தாக்கப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

பதற்றம் நீடிப்பதால் அங்கு வசிப்போர் பீதியடைந்து காணப்படுகின்றனர். (ஐ-17)

## உதயவாக்கு

**நேரத்தை எவ்வாறு ஒழுங்குபடுத்தித் திட்டமிட்டுச் செயற்படுவது என்று ஒருவருக்குத் தெரிந்துவிட்டால் அவர் வெகுசீக்கிரம் முன்னேறிவிடுவார்.**

*- வில்லியம் ஆலன் ஒயிட்*

# கண்ணீர் அஞ்சலி



**அமரர் உயர்திரு. R.உருத்திரா**

[சிரேஷ்ட சட்ட அறிஞர், நியாயவாதி - ஆத்தியடி,பருத்தித்துறை]

சோதனை, வேதனை, சாதனை என்ற மகா மாமுனி சிவயோக சுவாமிகள் பகிர்ந்த மகாவாக்கியங்களோடு, நாவன்மையாலும் தன் செயற்பாட்டினாலும் தானும் தன் பெறாமகள் மூலமும் வரைவிலக்கணம் வகுத்த எங்கள் அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய பெரும்தகையே! யாழ்.வடமராட்சி ஆத்தியடியின் அருமை மைந்தரே! அன்னாரது ஆத்மாசாந்தியடைய பருத்தித்துறை கோட்டு வாசல் அம்பாளுக்கு அவரது நாமத்தில் நெய்த்தீபம் ஏற்றி மோட்ச அர்ச்சனை செய்து எங்கள் நெஞ்சம் நிறைந்த கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் அன்புள்ள,
K.N. சச்சிதானந்தன்,
இராகுல தூரியன்ஸ் பருத்தித்துறை,

(சி/46629)(26-11-17)


## மோ.சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்ட பெண் காயம்

கைதடிப் பாலத்தில் மோட்டார் சைக்கிள் சக்கரம் சறுக்கியதில் அதில் பயணித்த பெண் தூக்கிவீசப்பட்டு காயமடைந்தார்.

சர்வகச்சேரியைச் சேர்ந்த கே.மேரிபுஷ்பம் (வயது 37) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-117)

## கன்னியர்மடத்தில் இ[illegible] ஒளிவிழா

யாழ்.திருக்குடும்ப கன்னி[illegible]ர்மட முன்பள்ளி சிறார்களின் ஒளிவிழா இன்று பிற்பகல் 2.30 மணியளவில் முன்பள்ளியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட் தந்தை றெஜீ இரஜஸ்வ ரன் அடிகளார் கலந்து கொள்வார். (எ-190)


# OUR CONDOLENCE

**ENG . K.THURAIRAJ**

**BRANCH MANAGER CGF - JAFFNA**

The Chairman, Board of Trustees, CEO, Managers and Staff of the **Construction Guarantee Fund** express their deepest sympathies to his wife and family on the sudden demise of **Mr.k.Thurairaj.**

CGF request all Construction Contractors in the Northern Province to share this moment of grief with the family members of **M.K.Thurairaj.**

Jaffna Branch will be closed on 6th December as a mark of respect and also on the date of his funeral.

(C/46631)

# கண்ணீர் அஞ்சலி



**லயன் வி.எஸ்.சிவரட்ணம்**

எமது திணைக்களத்தில் விலை மதிப்பீட்டாளராகக் கடமையாற்றிய

**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**

அவர்கள் கடந்த 03-12-2005 ஆம் திகதியன்று காலமாகி விட்ட செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்த அதேவேளையில், அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.விலை மதிப்பீட்டுத் திணைக்கள,
நலன்புரிச் சங்கம்.

(43617)(26-11-17)

# கண்ணீர் அஞ்சலி

## எந்திரி K.துரைராஜா

**(கிளை முகாமையாளர், நிர்மாண உத்தரவாத நிதியம்)**

*எந்திரி K. துரைராஜா அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருற்று இருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு எமது நிறுவனத்தினதும் ஊழியர்களினதும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**யுரோவில்,**
**866, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(சி/46630)(42-26-11-17)

## மக்கள் வங்கி அறிவித்தல்

## அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

*யாழ்.பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் 31.08.2004 இற்கு முன் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் கடந்த சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய 3 நாள்களிலும் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்கப்பட்டன.*

*தொடர்ந்து 06.12.2005, 07.12.2005 (செவ்வாய், புதன்) ஆகிய இரு தினங்களிலும் மக்கள் வங்கி, சுன்னாகம், உடும்பிராய் நீடித்த கருமபீடம், யாழ்.கன்னாதிட்டி, நெல்லியடி ஆகிய கிளைகளுக்குரிய நகைகள் ஏலத்தில் விற்கப்படும் என்பதை மக்கள் வங்கி நிர்வாகத்தினர் அறியத்தருகின்றனர்.*

**பிராந்திய முகாமையாளர்,**
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2005-12-05

(சி.46634) (39-26-11-17)

# 21 ஆவது ஆண்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் TRO

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இருபது ஆண்டுகாலமாக பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் முன்னெடுத்துவந்த மனிதாபிமானப் பணிகளுக்கூடாகவும், மீள்வாழ்வுக்கான செயற்பாடுகளுக்கூடாகவும் ஒரு புதிய பரிமாணத்துடன் 21 ஆவது ஆண்டில் கால்பதிக்கின்றது.*

*அதனை முன்னிட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் புலம்பெயர்நாடுகள் பலவற்றில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டுவருகின்றன. எமது தாயகத்திலும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன. அதற்கமைய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடகப்பிரிவு இரண்டு வெவ்வேறு போட்டிகளை நடத்துகின்றது.*

01) ஒளிப்படத் தொகுப்புப் போட்டி.
02) புகைப்படத் தொகுப்புப் போட்டி.

இவ்விரு துறைகளிலும் ஆர்வமுள்ளவர்கள் எவரும் பங்குகொள்ளலாம்.

*தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன.*

## போட்டி விதிமுறைகள்.

- *இருபது ஆண்டு காலமாக போர்ச்சூழலாலும், இயற்கை அனர்த்தங்களாலும் பாதிப்பிற்குள்ளாகிய மக்கள் எதிர்நோக்கிய இடப்பெயர்வுகள், சமூக,பொருளாதார ரீதியாக எதிர்நோக்கிய பின்னடைவுகள், மக்கள் மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவந்த மனிதாபிமானப் பணிகள், மீள்வாழ்வுக்கான புனர்நிர்மாண செயற்பாடுகள் என முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதான காலப்பதிவுகளாக இருத்தல் வேண்டும்.*
- *ஆக்கத் தொகுப்புக்கள் தெளிவானதாக அமையப்பெற்றிருத்தல் வேண்டும். ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட காட்சிகளாயின் அவை எங்கு, எப்போது, யாரால் பதிவுசெய்யப்பட்டன போன்ற சான்றுகளும் இணைக்கப்படுதல் வேண்டும்.*

ஆக்கத் தொகுப்புக்களில் பிரதானமாக உள்ளடக்கப்பட வேண்டியவை.

| | |
|---|---|
| 01 | காட்சிகளால் கதைசொல்லும் முறை |
| 02 | சொல்லவரும் செய்திகளின் தெளிவு |
| 03 | ஆர்வத்தைத் தூண்டும் பண்பு |
| 04 | காலத்தின் பதிவு |
| 05 | தொழில்நுட்ப நேர்த்தி |

ஆகிய அம்சங்கள் கவனத்திற்கொள்ளப்படுவதோடு, அவற்றிற்கு முக்கியத்துவமும் அளிக்கப்படும்.

*இப்போட்டிக்கு வயதெல்லை கிடையாது. தனியாகவோ அல்லது குழுவாகவோ பங்குபற்றலாம்.*

- *ஒளிப்படத் தொகுப்பு 20 – 25 நிமிடங்களுக்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும்.*
- *புகைப்படத் தொகுப்பு 35 – 40 படங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். படத்தின் அளவு 4" X 6" படங்கள் யாவும் வர்ணப்படங்களாக இருக்கவேண்டும்)*

**ஒளிப்படத் தொகுப்புப் போட்டிக்கான பரிசில் விவரம்.**

- முதலாம் பரிசு: *ஒரு ஒளிப்படப்பிடிப்புக் கருவி (VIDEO CAMERA)*
- இரண்டாம் பரிசு: *ஒளிப்படப்பிடிப்புக் கருவி (VIDEO CAMERA)*
- மூன்றாம் பரிசு: *தொலைக்காட்சிப் பெட்டி, ஒரு DVD ஒளிபரப்புக் கருவி (DVD PLAYER) என்பனவாகும்.*

**புகைப்படத் தொகுப்புப் போட்டிக்கான பரிசில் விவரம்.**

- முதலாவது பரிசு: *புகைப்படப்பிடிப்புக் கருவி*
- இரண்டாவது பரிசு: *புகைப்படப்பிடிப்புக் கருவி*
- மூன்றாவது பரிசு: *புகைப்படப்பிடிப்புக் கருவி*

*இரு ஆக்கப்பதிவுகளும் எமக்குக் கிடைக்கப்படவேண்டிய கால எல்லை 31-12-2005*

மேற்படி போட்டிகளில் பங்கெடுப்பவர்கள் போட்டிகள் தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்துகொள்வதற்கும். போட்டிக்கான ஆக்கங்களை அனுப்பிவைப்பதற்குமான தொடர்புகளுக்கு:

***ஊடகப்பிரிவு,***
***நடுவப்பணியகம்,***
***தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,***
***கிளிநொச்சி, இலங்கை.***

தொலைபேசி இல :- 021 228 5956
தொலை நகல்: - 021 228 5955
மின்னஞ்சல் :-tronews 2005@yahoo.com

(சி/46628)(26-11-17)

# சகல இனத்தவராலும் விரும்பி மதிக்கப்பட்ட பெருவள்ளலார் சேர் பொன். இராமநாதன்



## இன்று அவரது நினைவு தினம்

இலங்கையின் வடபால் உள்ள யாழ்ப்பாணத்திலே பல நூற்றாண்டுகளாகத் தமிழ்ப் பெருங்குடிமக்கள் சிறப்புடன் வாழ்ந்துவருகின்றனர். திருவும் கல்வியும் சீரும் தழைத்த யாழ்ப்பாணச் சிற்றூர்களிலே மானிப்பாயும் ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தைத் தமிழரசர் ஆண்ட காலத்திலே அவர்களின் நிர்வாகத்தில் 'கணக்கர்' என்ற உயர் பதவியை வகித்தவர் மானா முதலியார் என்பவர். இப்பதவி பல தலைமுறைகளாக இவரின் முன்னோராலும், பின் வந்தோராலும் வகிக்கப்பட்டு வந்தது. இதனால், இக்குடும்பத்தினருக்கு நாட்டிலே நன் மதிப்பு ஏற்பட்டிருந்தது.

புகழ்பூத்த இப்பரம்பரையின் வழிவந்த வைரவநாத முதலியார், ஒல்லாந்தரின் அரசில் வன்னிப் பகுதிக்கு அதிபதியாய் விளங்கிய எதிர்மன்னசிங்க முதலியாரின் மகளாகிய தங்கநாச்சன் என்னும் திருவனையாரை மணம்புரிந்தார். இவரின் திருமகளாரான விசாலாட்சியே இராமநாதனின் அன்னை செல்லாச்சியினதும், சேர் முத்துக்குமாரசுவாமியினதும் தாயாவர்.

இராமநாதனின் தாய்வழிப் பாட்டனாரும், பருத்தித்துறையிலே கெருடாவில் என்ற ஊரினருமான குமாரசாமி முதலியார் தம் தமைய்னாரான வாரித்தம்பியோடு கொழும்பிலே சென்று குடியேறித் தம் ஆற்றலாலும் இனிய பண்புகளாலும் அப்பெருநகரிலே பெரும் புகழீட்டினார்; அவர் ஆங்கிலக் கல்வியில் வல்லுநராகி ஆங்கில அரசின் மொழி பெயர்ப்பாளருமானார்.

1851 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி இராமநாதன் பிறந்தார்.

இராமநாதனும் அவரின் சகோதர்களும் உரிய வயதிலே அக்காலத்தில் 'இராணி கலைக்கழகம்' என அழைக்கப்பட்ட இன்றைய றோயல் கல்லூரியிலே கல்விகற்றனர்.

### நியாயவாதி

இராமநாதன் தமது அயரா உழைப்பாலும் திறமையாலும் மூன்றாண்டுக் கால நியாயவாதிப் பயிற்சியை ஈராண்டுகளில் பூர்த்திசெய்து, 1873 ஆம் ஆண்டிலே நியாயவாதியானார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்திரண்டு. எனினும், அனுபவம் வாய் ந்த நியாயவாதிகளுக்கு நிகராக, அவர் தாம் எடுத்துக்கொண்ட வழக்குகளை நடத்தி, யாவரதும் பாராட்டைப் பெற்றார்.

இராமநாதன் சிறந்த அரசியல் தலைவராகவும் விளங்கியுள்ளார்.

*'தூங்காமை கல்வி துணிவுடைமை*
*இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள்பவர்க்கு'* என்றும்,
*'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான்*
*அவனை*
*இகல் வெல்லல் யார்க்கும் அரிது'*

என்றும் முறையே அரசனதும், அமைச்சனதும் இயல்புகளைத் திருவள்ளுவப் பெருந்தகை எடுத்துரைத்துள்ளார். அவரின் பொன் மொழிக்கு எடுத்துக்காட்டாக சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் விளங்கினாரென்றால் அதுமிகையன்று. இக் கூட்டத்திற்கு கீழ்வரும் பேச்சினையே சான்றாகக் கொள்ளலாம்.

பௌத்த சமயத்தவர்கள் வெசாக் தினத்தைக் கொண்டாடுவதற்கு உதவியாக அந் நாளைப் பகிரங்க விடுமுறை தினமாக்கத் தீவிரமாய் உழைத்து, சட்டநிருபண சபையிலே வாதாடி அதில் அவர் வெற்றியும் பெற்றமை அவரின் பரந்த சமய சமரசத்தினையும், தேசிய உணர்வினையும் காட்டுவதாகும்.

அக்காலத்தில் பௌத்த தேவாலயங்களின் சொத்துக்கள், நிர்வாகச் சீர்கேட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. அந்நிய ஆட்சியாலும், அரசின் அலட்சியமும், மதக் காழ்ப்பும் நிறைந்த செயல்களினாலும் அந்தச் சொத்துக்கள் பிழையான வழிகளிலே பயன் படுத்தப்பட்டுச் சீர்கேடுற்றன.

ஆலய மானியங்கள் அவற்றின் தேவைகளுக்குப் பயன்படாது விரயம் செய்யப்பட்டன. இச்சீர்கேடுகளை நிவர்த்திக்க சேர் ஆதர் கோடன் (அக்காலத்திலிருந்த தேசாதிபதி) அவர்களின் அனுமதியோடு நியாயவாதிகள் நாயகம் சேர் சாமுவேல் கிரினர் பௌத்த தேவாலயச் சொத்துக்களின் பாதுகாப்பு மசோதா ஒன்றை சட்ட நிருபண சபையிலே சமர்ப்பித்தார். அதனை ஆதரித்து இராமநாதன் ஆற்றிய சொற்பொழிவு மிகச் சிறந்த தொன்றாகும்.

முஸ்லிம்கள் தமது திருமணங்களைச் சட்ட பூர்வமாகப் பதிவு செய்தல் வேண்டும் என்ற பிரேரணை சட்ட நிருபண சபையிலே விவாதத்துக்கு வந்தபொழுது அதனை எதிர்த்து இராமநாதன் வாதாடினார்.

''முஸ்லிம்களின் சகோதர மக்களாகிய தமிழ் இந்துக்களுக்கு இவ்விடயத்தில் பெருமளவு சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கையில் இத்தகைய பெரியதொரு மாற்றத்தினை முஸ்லிம்களின் மீது மாத்திரம் திணிப்பது ஏன் என்று எனக்கு விளங்கவில்லை'' என்று அவர் ஆட்சியாளர்கள் மீது வன்மையான கேள்விக் கணையை வீசினார்.

அவரின் ஆதாரபூர்வமான, ஆற்றல் நிறைந்த சொற்பொழிவின் பயனாக முஸ்லிம்களைப் பதிவுத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்தும் சட்டம் நிறைவேறாது போயிற்று.

### இன, மத, மொழி கடந்த தலைவர்

இலங்கை தேசாதிபதியிடமும் ஆட்சியாளர்களிடமும் இருந்து நீதி கிடைக்காத நிலையில், தமது முதிய பிராயத்தையும் பொருட்படுத்தாது இராமநாதன் கப்பலேறி இங்கிலாந்து சென்றார்.

இராமநாதன் ஆங்கில மேலிடத்து ஆட்சியாளர்களுக்கு உண்மைகளை எடுத்து விளம்பி, அவர்களின் கண்களைத் திறந்தார். அதன் பயனாகச் சிங்கள மக்களுக்கு நீதி கிடைத்தது.

தேசாதிபதி தம் பதவிகளை இழந்து நாடு திரும்ப நேர்ந்தது. இலங்கை மணித் திருநாட்டிலே மீண்டும் அமைதியும் ஆனந்தமும் நிலவலாயின. நாட்டு மக்கள் - சிறப்பாகச் சிங்கள மக்களும் தலைவர்களும் - இராமநாதனை இதயங்கனிந்த நன்றியோடு வரவேற்றுத் தம் தலைவராக ஏற்றிப் போற்றினர். இராமநாதனின் தேசியப் பணிகளில் இது முடிமணி போன்றது என்பதற்கையமில்லை.

ஐம்பத்திரண்டாண்டுச் சட்ட நிருபண சபைப் பணியிலே இராமநாதன் தாம் ஓர் அரசியல் சீர்திருத்தவாதி, பரந்த மனப்பான்மை கொண்ட கனவான், தேசிய உணர்வுமிக்க வீரர் என்பவற்றையெல்லாம் நிரூபித்த சந்தர்ப்பங்கள் இன்னும் பல உள்ளன.

**சு.சுரேஸ்குமார்**
**இந்து மன்றம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

குறுகிய மனப்பான்மைக்கோ இன, மத, மொழி வேறுபாட்டுணர்ச்சிக்கோ இடமளிக்காத மிகப்பெரிய மனிதர் என்பதை அவரின் எதிரிகள் கூட ஏற்றுக்கொள்ளுமளவிற்கு அவர் உயர்ந்து விளங்கினார்.

இதனைத் தவறாகப் பயன்படுத்திய சிங்களத் தலைமைகள் தமிழர் மீது திணித்து வரும் அடக்குமுறைகள் முடிவிற்கு வரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

*''தெய்வத்தால் ஆகாது எனினும் - முயற்சி*
*மெய்வருந்தக் கூலி தரும்''*

இராமநாதன் கல்வி, கலாசாரத் துறைகளிலும் அளப்பரிய சேவையாற்றிய உத்தமராவார். எமது யாழ்.பல்கலைக்கழகமும் அவரின் உழைப்பால் இன்று உயர்ந்து நிற்கிறது. இவர் 1930 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவர் புகழ் என்றும் மங்காது எல்லோர் இதயத்திலும் வாழும். ✵

---

## மாவீரர் நினைவாக பாடசாலைக்கு நிதி

கிளிநொச்சி,டிசெ.6

வீரவேங்கை திருவருள் ஞாபகார்த்தமாக அவரது பெற்றோர் வேரவில் இந்து மகாவித்தியாலயத்திற்கு 35 ஆயிரம் ரூபா நிதியினை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

பாடசாலைக்கு நுழைவாயில் அமைப்பதற்கும் வேலி அமைப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படவேண்டும் என மாவீரரின் தாயார் த.தில்லைநாயகி தெரிவித்துள்ளார். (எ-16-202)

## சஞ்சிகை வெளியீட்டு விழா

கிளிநொச்சி,டிசெ.6

மாங்குளம் மகாவித்தியாயலத்தின் 'கலை மழலை' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி செ.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே. குரூஸ் கலந்துகொள்ளவுள்ளார். (எ-202)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

கிளிநொச்சி, டிசெ.6

டென்மார்க் அகதிகள் பேரவையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து வவுனியா வடக்குப் பிரதேசத்தில் மலசலகூடப் பாவனையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன.

புளியங்கூடல் வடக்குப் பகுதி கிராமங்களான புதூர், பரசங்குளம், புதூர் சந்தி ஆகிய கிராமங்களில் ஒருங்கிணைந்து நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக்கருத்தரங்குகள் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-202)

## கள்ளப்பாடு பாடசாலைக்கு நூல்கள் அன்பளிப்பு

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெரும் அழிவுகளைச் சந்தித்த முல்லைத்தீவு கள்ளப்பாடு அ.த.க. பாடசாலையின் மாணவர்களுக்கு உதவும் பொருட்டு மல்லாவி மத்திய கல்லூரி நூலகத்தினால் ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த நூல்கள் மல்லாவி மத்திய கல்லூரி ஆசிரியர்கள்,மாணவர்களால் கள்ளப்பாடு அ.த.க.பாடசாலைக்கு நேரில் எடுத்துச்செல்லப்பட்டு வழங்கப்பட்டது. (எ-322)

## மின்சாரம் வழங்குவதில் திருவையாறு புறக்கணிப்பு

கிளிநொச்சி,டிசெ.6

கிளிநொச்சி திருவையாறுப் பகுதி மக்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இங்கு மின்சார விநியோகமும் கிராமம் கிராமாக துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், திருவையாறுப் பகுதிக்கான மின்சார விநியோகம் இதுவரை வழங்கப்படவில்லை. இக்கிராமத்திற்கு மின்சாரம் அடிப்படைத் தேவையாக இருகின்றபோதும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை என்றும் -

இக்கிராமத்தில் மின்சாரம் இருந்த காலத்தில் இப்பகுதி மக்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்திருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதிக்கு 24 மணி நேர மின்சார விநியோகம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள போதும் திருவையாறுக் கிராமம் கவனத்தில் எடுக்கப்படாது விடப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து இப்பகுதி மக்களின் சிரமங்களைப் போக்க முன்வரவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (எ-203)




## யோகபுரம் பற்சிகிச்சை முகாமில் மாணவர், ஆசிரியர் பங்கேற்பு

மல்லாவி, டிசெ.6


நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் நடமாடும் பற்சிகிச்சைப் பிரிவினரால் கடந்த மாதம் 28 ஆம் திகதி யோகபுரம் மகாவித்தியாலயத்தில் இலவச பற்சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இதில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் சிகிச்சை பெற்றுப் பயனடைந்தனர். மேலும், மாணவர்களுக்கு பற் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

பற்சிகிச்சைக்கான வசதி வாய்ப்புகளற்ற நிலையிலுள்ள மல்லாவிப் பிரதேச மக்கள் பற்சிகிச்சைக்காக 45 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகருக்கு செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

இந்தநிலையில், மேற்படி நடமாடும் சிகிச்சை முகாமில் ஆசிரியர்களும், மாணவர்களும் ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் கலந்து கொண்டனர். (எ-322)





நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் நடமாடும் பற் சிகிச்சைப் பிரிவினரால் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் இலவச பற் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டபோது எடுக்கப் பட்ட படம். *(படம்: சிறிலஷ்மணன்)*

## ஒளி விழா

கிளிநொச்சி,டிசெ.6

முழங்காவில் மகாவித்தியாலயத்தின் கத்தோலிக்க மன்றத்தினர் நடத்தும் ஒளி விழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் பா.சிவராசா தலைமையில் இந்த விழா நடைபெறும். (எ-88)

## கட்டாக்காலி ஆடு, மாடுகளால் சிரமம்

பரந்தன்,டிசெ.6

பூநகரிப் பிரதேசத்திலுள்ள பள்ளிக்குடா கிராமத்தில் கட்டாக்காலி ஆடு,மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இவை குறிப்பாக இரவுவேளைகளில் சந்தைப் பகுதி ,வழிபாட்டுத் தலங்கள், பாடசாலை, பொது நிறுவனங்கள் என்பனவற்றை தமது தங்குமிடங்களாகவும் அதனைத் சுற்றியுள்ள இடங்களில் மாலை தமது மேச்சலுக்குரிய நிலமாகவும் இவை பயன்படுத்துகின்றன. இதனால் சூழல் மாசுபடுவதோடு நுளம்பு பெருகுவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. (எ-352)

# கல்வி மேம்பாடு என்பது பேச்சளவில் பயன்தராது!

கல்வி என்பது கல்லுதல் அல்லது தோண்டுதல் என்னும் சொல் அடியில் பிறந்தது. மனிதனிடத்தில் இயல்பாக உள்ள அறியாமையைத் தோண்டி எறிந்துவிட்டு அறிஊற்றைக் கண்டு, அந்த உயர் சக்தியை வளர்ப்பதே கல்வியாகும். இதுவே, கல்வியின் நோக்கம், பயன், 'கல்வியில் உயர் யாழ்ப்பாணம்', எனப் போற்றப்பட்ட நானிலம் நம் சிவபூமி. ஆனால், இன்று யாழ்ப்பாணத்தை விட்டு கல்வி எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. இந்த உண்மையை அனைத்துப் பிரிவு மக்களும் நினைக்கிறார்கள்; பேசுகிறார்கள். இந்த நிலைக்குக் காரணம் என்ன? என்று சரியான திசையில் சிந்திக்க மட்டும் மறுக்கிறார்கள்.

யாழ்.மாவட்டக் கல்வி மேம்பாடு என்பது பல கோணங்களில் ஆராயப்படுதல் வேண்டும். பெற்றோர், பாடசாலை, ஆசிரியர்கள், கல்வித் திணைக்களம், மாணவர்கள், பாடசாலைச் சமூகம், தனியார் துறை எனப் பலதரப்பட்டவர்கள் இதனுடன் தொடர்புபடுகின்றனர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது நம்முன்னோர்கள் வகுத்து வைத்த படிக்கட்டாகும். மாதா, பிதா எனும் பெற்றோர் முதலில் பேசப்படுகின்றார்கள். பிள்ளைகளின் கல்வியும் ஏனைய செயற்பாடுகளும் பெற்றோரில்தான் சார்ந்து நிற்கிறது. பெற்றோர் 'பெரிய பாடசாலையில்' பிள்ளைகளைச் சேர்த்தால் போதுமானது என நினைக்கின்றார்கள். அப்பால் தம் பங்கைச் செவ்வனே செய்வதில்லை. பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புதல், அவர்களின் புறச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தல், உடல்நலம் பேணுதல், தம் பிள்ளையின் செயற்பாடுபற்றி ஆசிரியருடன் கலந்தாலோசித்தல் போன்ற பல நிலைப்பாடுகள் பெற்றோருக்குரியது. ஆனால், இன்று பெரும்பாலான பெற்றோர் என்ன செய்கிறார்கள்? பணம் தேடுவது ஒன்றே குறியாக வாழ்கிறார்கள். பிள்ளைகளுக்கு அளவுக்கதிகமான ஆடம்பர வாழ்வை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களைப் பாதை தவறிய பயணத்திற்கு வழிப்படுத்துகிறார்கள். சிலர் தம் பிள்ளைகளின் தவறுகளைக் கண்டுகொள்ளாமல் ஆசிரியர்கள் மீதும், புறச்சூழல் மீதும் தவறுகாண முற்படுகின்றனர். பிள்ளை கண்டிப்புக்குள்ளாகையில் காரணத்தை அறியாமல் 'மனித உரிமைகள்' பேசப் புறப்பட்டுவிட்டால் யார்தான் பிள்ளைகளைக் காப்பது? பெற்றோரே உங்கள் செயல்களைச் சிந்தியுங்கள்!




மாணவர்களின் கல்விக் கோயில் பாடசாலை ஆகும். பாடசாலைகள் சிறந்த செயற்றிறன் மிக்கதாக அமைவது அவசியமாகும். பாடசாலையின் செயற்பாடு அதிபர், ஆசிரியர்கள் எனும் இரு கண்களினால் பிரகாசிக்கும். சென்ற காலங்களில் புகழ்பூத்த - நிர்வாகத் திறமைமிக்க - அதிபர்கள் இருந்தார்கள். இன்று பல காரணங்களினால் இந்நிலை மாறியுள்ளது. ஆளுமையற்றவர்களும் நியமனக் குளறுபடிகளும் புற அழுத்தங்களும் அதிபர்களின் செயற்பாட்டைப் பாதித்து நிற்கின்றன. அதிபர், கல்லூரித் தாயின் தலைமகன், கண்டிப்பும் கருணையும் ஒரு சேர அவரிடம் காணப்படல் வேண்டும். தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் தன்மையும் ஒழுக்கமும் அதிபரிடம் காணப்படல் வேண்டும். அதிபர் சரியாகச் செயற்படும் போதுதான் ஆசிரியர்களையும் மாணவர்களையும் சரியான பாதைக்கு வழிப்படுத்திச் செல்ல முடியும். ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்றாகவே கருதும் தன்மை அதிபரிடம் இருக்க வேண்டும். பல பாடசாலைகளில் அதிபரின் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கப்படுவதில்லை. ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம், மாணவர்கள், கல்வித் திணைக்களம் யாவும் பூரண ஒத்துழைப்பை வழங்கினாலன்றி அதிபரினால் பாடசாலை நிர்வாக இயந்திரத்தைச் சீராக இயக்க முடியாது. நிர்வாகச் சீரற்ற பாடசாலைகளினால் விளைவது என்ன?

### உயர்ந்த குடிமகன் நல்ல ஆசிரியரே!

சமூகத்தின் உயர்ந்த குடிமகன் நல்லாசிரியரே ஆவார். கல்வியின் தகுதி கற்பிக்கும் ஆசிரியரையே மிகுதியும் சார்ந்திருக்கும். கற்பிக்கும் ஆசிரியரிடம் சிறந்த திறன் இல்லையானால் பாடசாலைகளினால் விளையும் நன்மையை விட விபத்துக்களும் குழப்பங்களும் தான் ஏற்படும். வகுப்பறையில் ஆசிரியன் கற்பிக்கும்பொழுது, மாணவர் பகுதியுடன் ஒன்றியிருக்க வேண்டும். மாணவர் மத்தியில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு கற்பிக்கும் ஆசிரியர்தான் கற்பித்தலில் வெற்றி பெற இயலும். மாணவனுக்கு முதலாவது பாட அலகு ஆசிரியர்தான். ஆசிரியரின் தூயதன்மை, அவர் காட்டும் கண்டிப்பும், அக்கறையும் தான் மாணவனின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். இது அறிந்துதான் நம் முன்னோர்கள் 'தாரமும் கல்வியும் தலைவிதிப்படியே' எனக் கூறியுள்ளனர்.

ஆசிரியர்களின் செயற்பாட்டிற்குப் பல இடையூறுகள் இப்போது தோன்றியுள்ளன. அதிபர், பெற்றோர் ஒத்துழையாமை மாணவனின் வன்முறைப் போக்கு கல்வித் திணைக்களத்தின் சில அறிவுறுத்தல்கள், மனித உரிமை அமைப்புக்கள் என்பன இவற்றில் சிலவாகும். 'அடியாத மாடு படியாது' 'அடியைப் போல் அண்ணன் தம்பி உதவான்' போன்ற வாசகங்கள் நம் சமூகத்தில் தொன்றுதொட்டு இருந்து வருகின்றன. ஆசிரியரின் கண்டிப்பும் ஏற்ற தண்டனையும் அவசியமாகும்.

'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர் கொருகுணமுண்டு' நமது கலாசார, பண்பாடுகள் எச்சூழ்நிலையிலும் கை விடப்படக் கூடாது. முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் உரியவர்களாகத் திகழ வேண்டும். மாற்றங்கள் நமது விழுமியமான ஆணிவேரை அறுக்க முடியாது. மேற்கு லகநாடுகள் உலக மயமாக்கல் எனும் போர்வையில் நமது கலாசார சீரழிவிற்கு வித்திட்டு நிற்கின்றன. 'மனித உரிமைகள்' எனும் அமைப்பின் செயற்பாடுகளை அப்படியே நாம் ஏற்கமுடியுமா?

அறிவு ஜீவிகளே! சிந்தியுங்கள்! எல்லாவற்றுக்கும் தலையாட்டிப் பொம்மைகளாக இருக்காமல் நிராகரிக்க வேண்டியவற்றை துணிந்து கூற வேண்டும்.

பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்களின் செயற்பாடு மனித உரிமை அமைப்புக்களின் மூலம் சிக்கலடைந்து, நமக்கென்ன? எப்படியும் போகட்டும் எனும் மனநிலை வளர்ந்து வருகிறது. இந் நிலை மாணவர்களின் ஒழுக்கம், கல்விச் செயற்பாடுகளைப் பாதித்து வருகிறது சிந்தியுங்கள்!

மாணவர்கள் வரும் யுகத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள். இளைஞர்களின் சக்தி மாபெரும் சக்தி. மாணவப்பருவம் -பிரமச்சரியப் பருவம் - வாழ்விற்கு உரம் இடும் பருவமாகும். நல்ல கல்வி, ஒழுக்கத்திற்கு வித்திடும் காலத்தில் வன்முறையிலும், தேவையற்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டு எதிர்காலத்தை சூனியமாக்கும் மாணவர்சமூகம், நல்ல சிறந்த மேம்பாட்டு நிலைக்கு மாறவேண்டும். பெற்றோர், ஆசிரியர்கள், சமூகப் பெரியவர்கள் தமது வழிகாட்டிகள் என்பதை மாணவ உலகம் நம்பவேண்டும். கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு எனக் கூறப்பட்டிருப்பதை புரிந்துகொள்ள வேண்டும். சினிமா வன்முறைக் கலாசாரம் என்றும் உதவாது. மாணவர்களே! நீங்கள் மாணவர்களாக இருந்து உங்கள் கடமையைச் செய்யாது விடில் இருண்டஎதிர்காலத்தை வருந்தி அழைத்துக் கொள்வீர்கள் என்பது திண்ணம்.

சொல்லின் செல்வர்
**இரா.செல்வவடிவேல்**




கண்டாவளை மகா வித்தியாலயத்தின் பெயர் வளைவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. புதிதாக நிறுவப்பட்ட பெயர் வளைவை முதலாவது படத்திலும் நிகழ்வில் மங்கள விளக்கேற்றி வைக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்
(படங்கள்: பரந்தன் செய்தியாளர்.)

**ஜே.வி.பி., ஹெல உறுமயவின் எதிர்ப்புக்கு மத்தியிலும்**

# நோர்வேயின் அனுசரணை நீடிப்பதையே ஜனாதிபதி மஹிந்த விரும்புகின்றாராம்!

கொழும்பு, டிசெ. 6

ஜே.வி.பியினரதும் ஜாதிக ஹெல உறுமயவினரதும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சமாதானப் பேச்சுகளில் நோர்வேயின் பங்களிப்பைத் தொடர்ந்தும் பெறுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என ஜனாதிபதியுடன் மிகவும் நெருங்கிய வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமைகள் ஊடாகவே இது விடயத்தில் ஜனாதிபதிகாய் நகர்த்தியுள்ளார்.

கூட்டுத் தலைமை நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, நோர்வே, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடவும் அவற்றின் உதவிகளைப் பெறவும் ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறாராம்.

கூட்டுத் தலைமைகளுடனான சந்திப்பு இன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவிருந்தது. இந்தச் சந்திப்பில் இலங்கையிலுள்ள ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா, அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லன்ஸ்டட், நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், பிரிட்டிஷ் தூதுவர் ஸ்டீபன் இவான்ஸ் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவிருந்தனர்.

எனினும், ஜே.வி.பியினரதும், ஜாதிக ஹெல உறுமயவினரதும் அதிருப்தி நிலை காரணமாக இந்தச் சந்திப்பு கடைசிநேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மேற்கோள்காட்டும் ஜே.வி.பியினர், சமாதானப் பேச்சில் நோர்வேக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என வலியுறுத்தியுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயவினரும் இதேபோன்ற கடும்போக்கில் ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதேவேளை, யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்து திருத்தங்களை மேற்கொள்ளவும், அது தொடர்பாகப் புலிகளின் ஆதரவைப் பெறவும், சமாதானப் பேச்சின் அனுசரணையாளர்களான நோர்வேயின் உதவி அரசுக்கு அத்தியாவசியமாகியுள்ளது.

தீர்வு தொடர்பாக பேச்சுக்களை ஆரம்பிக்காவிட்டாலும் - யுத்த நிறுத்த உடன்படிக்கை மீளாய்வு செய்யப்படாவிட்டாலும் - 2006 ஆம் ஆண்டில் விபரீதமான விளைவுகள் ஏற்படலாம் என ஜனாதிபதி தனது தரப்பினரிடம் தெரிவித்துள்ளாராம்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபின் தென்பகுதி அரசியல் கட்சிகளுக்கு, இந்த விபரீத நிலை தொடர்பாகத் தெளிவுபடுத்தும் அதேசமயம், உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகளுடன் பேச்சுகளை நடத்தவும் ஜனாதிபதி மஹிந்த திட்டமிட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (க)

# ஊர்காவற்றுறையில் தொடர்ந்தும் பதற்றம்

ஊர்காவற்றுறை,டிசெ.6

ஊர்காவற்றுறையில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இனம் தெரியாத ஆயுததாரிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வருவதனைத் தொடர்ந்து அங்கு பொதுமக்கள் மத்தியில் அச்சமும், பீதியும் ஏற்பட்டுள்ளது.

அச்சம் காரணமாக நகரின் மத்தியில் வசிக்கும் மக்கள் இரவுவேளைகளில் தமது உறவினர் வீடுகளில் சென்று தங்கிவருகின்றனர்.

அண்மையில் ஊர்காவற்றுறை மண்குழி வீதியில் உள்ள வீடு ஒன்றில் படம் பார்த்துக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் தம்பாட்டிப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டமை தெரிந்ததே. (எ-16)



அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வெல்ல உற்பத்தித் தொழிற்சாலை திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் திருமதி அஞ்சலாதேவி சாந்தசீலன் தொழிற்சாலையைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். சங்கத்தின் தலைவர் செ.காந்தராசா, அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர் ந.மதனசேகரம், பிரசார அலுவலர் கி.வரதராசா மற்றும் சங்க உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.
(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)

# மன்னிப்புச் சபையினர் புலிகள் பகுதிக்கு வந்து குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கலாம்



## தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,டிசெ.6

தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு சர்வதேச மன்னிப்பு சபையினர் விஜயம் செய்து விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்யலாம்.

இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் நாயகம் ஐரெனி சுபைடாகான், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கடந்த சனிக்கிழமை கிளிநொச்சியில் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்பின் போது தமிழ்ச்செல்வன் அவரிடம் தெரிவித்ததாவது:-

இரு தசாப்த கால யுத்தத்தால், தமிழ்மக்கள் சமூக பொருளாதார அடிப்படையில், பாதிக்கப்பட்டு இடப்பெயர்வுகளுக்குள்ளாகி மனித உரிமைகள் மறுக்கப்பட்டு வாழ்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை முற்றாக இயல்புக்குத் திரும்ப யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்த வேண்டும்.

பேச்சுக்களின் ஊடாக உரிய அரசியல் தீர்வை உருவாக்குவதற்கான அமைதி முயற்சிகளில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் முக்கியமானதாக இருக்கிறது. கடந்தகால யுத்தநிறுத்த ஒப்பந்தங்களின் அனுபவங்களை கவனத்தில் கொண்டு மிக அவதானமாக - நீண்ட காலம் - விவாதிக்கப்பட்டே இந்தப் புதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மக்கள் போரினால் இடம்பெயர்வுக்குள்ளானார்கள். இவர்கள் தமது இயல்பு வாழ்க்கையை மீள மேற்கொள்வதற்காக தெளிவான வரையறைகளும் காலஎல்லைகளும் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளன. இந்தக் கால எல்லைகள் எல்லாம் வெகு காலத்துக்கு முன்பே காலாவதியாகிவிட்டன. இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் எதுவித பயனும் ஏற்படவில்லை என்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

தமிழர்கள் மீது ஸ்ரீறிலங்கா இராணுவத்தினர் தொடச்சியான ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ளனர். தமிழ் மக்களின் கடலோரப் பிரதேசங்களும், விவசாய நிலங்களும் அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தமிழர்கள் வாழ்வதற்கான அடிப்படை மனித உரிமை மறுக்கப்படுகிறது.

இந்த நிலைமைகளாலும், ஆழிப்பேரலை மற்றும் ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும் தமிழ்மக்கள் விரக்தி நிலையில் உள்ளனர். தாங்கள் ஒருவித அரசியல் வெறுமைக்குள் சிக்க வைக்கப்பட்டிருப்பதாகக் கருதுகின்றனர்.

தமிழர் தாயகத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினது ஆக்கிரமிப்புப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா அரசுக்குரியது. அந்தப் பகுதிகளில் நடைபெறும் குற்றச் செயல்களுக்கு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் ஒருதரப்பினராகிய தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாக முடியாது.

இருப்பினும் அத்தகைய வன்முறைகளுக்கு ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்களுமே காரணம் என்பதை நாம் அறிவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அவதூறு பரப்புவதற்கான அரசியல் செயல்திட்டமாகவே, விடுதலைப் புலிகளுக்கு எதிரானவர்கள் என அடையாளம் காணப்படுகிற தனிநபர்களை ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் இவர்கள் சுட்டுக்கொலை செய்கின்றனர். இதனையே இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவும் எமக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்து 1.8 இன்படி இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களைக் களையவேண்டும். இதற்குரிய சரத்தை முழுமையாக செயற்படுத்த வேண்டும் என்பதே எங்களது அழுத்தமான வலியுறுத்தலாகும். இதுபோன்ற சரத்துகளை தீவிரமாக செயற்படுத்துவது குறித்து உடனடிப் பேச்சுகளை இருதரப்பினரும் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துவதன் மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மீதான எமது உள்ளார்ந்த ஈடுபாட்டை நாம் வெளிப்படுத்துவோம்.

இந்த ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய வேண்டிய எதுவிதத் தேவையும் இப்போது இல்லை. ஸ்ரீலங்கா அரசினால் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்தம் முழுமையாக - உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் - செயற்படுத்தப்பட்டாலே இருதரப்பு நம்பிக்கையும் கட்டியெழுப்பப்படும். வன்முறைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு தமிழ்மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திருப்பமுடியும். இதற்குரிய அனைத்து அம்சங்களும் இந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளன.

இந்த உண்மை நிலைகளை ஸ்ரீலங்கா அரசிடம் சர்வதேச மன்னிப்புச் சபை விளக்க வேண்டும். இதைவிடுத்து சிறார்களை படையில் சேர்க்கிறார்கள் என்ற இல்லாத ஒரு குற்றச்சாட்டை தொடர்ந்து கூறிக்கொண்டு மனித உரிமை மீறல்களிலும் தமிழ்மக்கள் அமைதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை நிராகரிப்பதிலும் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டு வருகிறது.

தமிழர் தாயகப்பகுதி முழுமைக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்காணிப்புக் குழுவினர் பயணம் செய்யவேண்டும். மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச விதிமுறைகளுக்கு எதிராக சிறார்கள் படையில் சேர்க்கப்பட்டுள்ளனரா என்பது குறித்தும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான படுகொலைக் குற்றச்சாட்டுகள் குறித்தும் உரிய விசாரணைகள் நடத்தலாம் என்று அழைப்பு விடுக்கிறோம் - இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ஐ-3)

# தீர்வுக்கு ஒவ்வாதது என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட முறையை இப்போதும் பேசுவதா?



## சர்வகட்சி மாநாடு வீண் கால விரயம் என்கிறார் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.

கொழும்பு,டிசெ.6

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்களால் நிராகரிக்கப்பட்ட ஒற்றை ஆட்சிமுறையில் தான் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படும் என்றால், இதன் அடிப்படையில் கூட்டப்படும் எந்த ஒரு கலந்துரையாடல்களிலோ அல்லது சர்வகட்சி, மாநாட்டிலோ தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒரு போதும் கலந்து கொள்ளாது என திட்டவட்டமாக கூறுகிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம்.

2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் 31ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால 'தன்னாட்சி அதிகாரசபை' ஆலோசனையின் அடிப்படையில் -விட்ட இடத்திலிருந்து பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு தாம் முழு ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் கூறினார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். இதற்கான பொறுப்புகளை அரசியல் விவகார அமைச்சர் டி.யூ.குணசேகராவிடம் ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார். நாடாளுமன்றின் அடுத்த அமர்வில் புதிய அரசின் வரவு- செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபின், அடுத்து வரும் தினங்களில், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடனான சந்திப்புகள் ஆரம்பமாகும் என அமைச்சர் டியூ. குணசேகர கூறுகின்றார்.

இக்கூட்டங்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக் கலந்து கொள்ளுமா? எனக் கேட்டபோதே ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக ஜோசப் பரராஜசிங்கம் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒற்றை ஆட்சி முறையின் கீழ்தான் பரிகாரம் காணப்படும். சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை என ஜனாதிபதி தனது தேர்தல் பிரசாரங்களின் போதும், தொடர்ந்த அவரது கொள்கை விளக்க உரையின் போதும் கூறியுள்ளார். தென்பகுதி பேரினவாத போக்குடையவர்களை மட்டும் கருத்தில் கொண்டு செயல்படும் ஜனாதிபதியுடனோ அவரது அரசுடனோ பேசுவ்தில் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை.

மாறிமாறி வந்த அரசுகளுடன் தமிழ்க் கட்சிகள் பேசிப் பேசிக் களைத்துப் போய்விட்டன. பேசும் தலைமைகளில்தான் மாற்றங்கள் காணப்படுகின்றனவேயன்றி, பேச்சுகள் தொடர்பிலான தென்னிலங்கை தலைமைகளின் போக்கிலோ, நிலைப்பாட்டிலோ எந்த முன்னேற்றமும் காணப்படவில்லை. இதனை சர்வதேச சமூகம் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளது.

பேச்சுகளின் பின்னே தீர்வு காணப்படவேண்டும். ஆனால், இங்கோ இதுதான் தீர்வு என்று தீர்மானித்துக்கொண்டு பேச அழைக்கிறார்கள். எனவே, இது வெறும் கண்துடைப்பு. இதனால் எந்த நன்மையும் ஏற்படாது. இதுதான் யதார்த்தம்.

திம்பு பேச்சுவார்த்தையிலிருந்து ஒஸ்லோ பிரகடனம்வரை பல சுற்றுப்பேச்சுகளையும், அரசியல் கட்சி மாநாடுகளையும் சந்தித்துவிட்டோம். முடிவு ஏமாற்றமே. இதனால் ஜனாதிபதியால் கூட்டப்படும் சர்வகட்சி மாநாட்டில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கலந்துகொள்வது காலத்தையும், நேரத்தையும் விரயம் செய்து வீணடிப்பதாகவே அமையும். எனவே, நாம் சர்வ கட்சி மாநாட்டை நிராகரிக்கின்றோம்.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக விட்ட இடத்திலிருந்து பேச்சுகளை ஆரம்பிக்க இணங்கி, அது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தினால் நாம் அதில் கலந்துகொள்ளத் தயார்- என்றுஜோசப் பரராஜசிங்கம் எம்.பி கூறினார். தென்பகுதிப் பெரும்பான்மை இனமக்கள் அனைவரும் ஒற்றை ஆட்சி முறையை ஆதரித்து வாக்களிக்கவில்லை. அவர்களில் ஐம்பது வீதமானவர்கள் சமஷ்டி முறையில் தீர்வு காணப்படவேண்டும் எனவும் வாக்களித்துள்ளனர் என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளவேண்டும்

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (க)

# ஒய்வுகாலத்தில்ஜனாதிபதிமார் அனுபவிக்கும் அனுகூலங்கள்

## ஒரு கண்ணோட்டம்

கொழும்பு, டிசெ.6

பதவியிலிருந்து ஓய்வுபெறும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளுக்கு மாதாந்த ஓய்வூதியப் பணமாக ரூ.25ஆயிரம் மட்டுமே வழங்கப்படுகிறது.

அவர்கள் காலமாகுமிடத்து அவர்களது மனைவிமாருக்கு விதவை ஓய்வூதியக் கொடுப்பனவு உண்டு.

இந்த ஓய்வூதியத் தொகை மாதமொன்றுக்கு ரூ.16,666 ஆகும்.

விதவையர்களான திருமதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும், திருமதி ஆர்.பிரேமதாஸவுக்கும் இந்த ஓய்வூதியத் தொகையுடன் வேறு சில அனுகூலங்கள், சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளின் தொகை நான்காகும். ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரே அந்த நால்வருமாவர்.

இந்த நாலு பேரில் அண்மையில் ஓய்வுபெற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கிடைக்கவிருக்கும் ஓய்வு கால அனுகூலங்களையும், சம்பத்துகளையும் ஓய்வுபெற்ற முன்னைய ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம்.

ஓய்வூதியக் கொடுப்பனவுகளும், சம்பத்துகளும் வருமாறு:-

**ஜே.ஆர்.ஜெயவர்த்தன**

- ஓய்வூதியம்- மாதம் ரூ.25,000/=
- வாகனங்கள்- 2 (இதில் ஒன்று குண்டு துளைக்காதது)
- ஊழியர் தொகை- 9
- வீட்டுப் பணியாட்கள் - 5
- பாதுகாப்பு ஊழியர்கள் - 36

இவர் காலமானதையடுத்து மனைவிக்கு மாத ஓய்வூதியமாக ரூ. 16,666/= வழங்கப்படுகிறது அவருக்கு-

- பாதுகாப்பு ஊழியர்-11
- வாகனங்கள்-2
- ஊழியர் - 2 (இதில் ஒருவர் வீட்டு வேலையாளர், ஒருவர் சாரதி)

**ஆர்.பிரேமதாஸ**

பதவியில் இருக்கும்போதே இவர் அகால மரணமாகிவிட்டார். மனைவி ஹேமா பிரேமதாஸவுக்கு மாதாந்த ஓய்வூதியம் ரூ.16,666 வழங்கப்படுகிறது.

- வாகனங்கள் -2
- ஊழியர் -3
- பாதுகாப்பு உத்தியோகத்தர் -10
- உத்தியோகபூர்வ இல்லமும் கொழும்பு-07, ஸ்ரன்மோ கிரெஸென்டில் வழங்கப்பட்டிருக்கிறது.

**டி.பி.விஜேதுங்க**

- ஓய்வூதியம் மாதமொன்றுக்கு- ரூ.25,000/=.
- வாகனங்கள் - 3 (இதில் ஒன்று குண்டு துளைக்காத கார்)
- இரண்டு மோட்டார் சைக்கிள், ஊழியர் - 20.
- பாதுகாப்பு உத்தியோகத்தர் - 30
- கொழும்பு-07,பாஜெட் றோட்டில் உத்தியோகபூர்வ அலுவலகமும், வீடும் வழங்கப்பட்டுள்ளது.

**சந்திரிகா குமாரதுங்க**

- மாதாந்த ஓய்வூதியம் - ரூ. 25,000/=
- வாகனங்கள்:- குண்டு துளைக்காத மோட்டார் வாகனங்கள் - 4.
- சொகுசு ஜீப் - 2
- வேறு சொகுசு வாகனங்கள் - 3
- ஜீப்கள் - 7
- வான் - 1
- பஸ் -1
- மோட்டார் சைக்கிள்கள் - 18

(மொத்த வாகனங்களின் தொகை - 36)

- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்:-

ஒரு பொலிஸ் எஸ்.பி, இரண்டு ஏ.எஸ்.பிமார் உட்பட பொலிஸாரின் எண்ணிக்கை 138.

ஒரு இராணுவ மேஜர், ஒரு கப்டன் உட்பட மொத்தம் 50 கமோண்டோக்கள்

அரசியல் ஆலோசகர், சர்வதேச விவகார ஆலோசகர், சமூக சேவை ஆலோசகர், அந்தரங்கச் செயலாளர், திட்ட முகாமையாளர், சுருக்கெழுத்தாளர்கள் என்று பல்வேறு துறைகளுக்கும் என்று சாரதிகள், உதவியாளர்கள், அலுவலகப்பணியாளர்கள் என்றும் மொத்தம் உத்தியோகத்தரின் எண்ணிக்கை 50. ஆக மொத்தம் 248 பேர். (க)

# சிறுபான்மை இனங்களை மோதவிடும் பேரினவாதிகளின் சதியில் சிக்காதீர்கள்!

## திருமலை தமிழ் மக்கள் பேரவை கோருகின்றது

தமிழர் - இஸ்லாமியர் ஆகிய சிறுபான்மை இனத்தவர்களை மோதவிடும் பேரினவாதிகளின் சதியில் சிக்காது தீர்க்க தரிசனத்துடன் செயற்பட சிறுபான்மை மக்கள் முன்வர வேண்டும்.

- இவ்வாறு கோரியிருக்கிறது திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை.

இவ்விடயம் தொடர்பாக பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கோரப்பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு இணைந்த தமிழீழ மண்ணைத் தாயகமாகக் கொண்ட தமிழ், இஸ்லாம் மக்கள் மத்தியில் கசப்புணர்வையும், குரோதங்களையும் ஏற்படுத்தி சிறுபான்மையினமாகிய இவ்விரண்டு இனங்களையும் மோத வைப்பதன் மூலம் தமது பௌத்த பேரினவாதக் கொள்கைகளை முன்னெடுப்பதற்கும், தமிழீழத் தேசியப் போராட்டத்தை சீர்குலைப்பதற்கும் காலங்காலமாக ஸ்ரீலங்கா அரசாங்கமும், ஸ்ரீலங்கா அரச படைகளும், ஸ்ரீலங்கா புலனாய்வுத் துறையும் திட்டமிட்ட அடிப்படையில் பல்வேறு விதமான விஷமச் செயல்களையும், அராஜகங்களையும் அரங்கேற்றி வந்துள்ளன. தொடர்ந்தும் அதனையே செய்தும் வருகின்றன.

இதன் மூலம் ஒருவரோடொருவர் பின்னிப்பிணைந்து நகமும், சதையும் போல் இணைந்து வாழ்ந்த சிறுபான்மையினச் சமூகங்கள் இரண்டின் மத்தியிலும் பகையுணர்வும், குரோதமும் தோன்றி அதன் மூலம் இரண்டு இனங்களுமே தங்கள் வாழ்வினை தொலைத்து வருகின்றன. இச்செயல்களின் பின்னணியில் இருப்பவர்கள் தங்கள் நோக்கத்தை இலகுவாக நிறைவேற்றிக் கொண்டுள்ளனர். நிறைவேற்றிக் கொண்டுமிருக்கின்றனர்.

1990 ஆம் ஆண்டிற்குப் பின்னரான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் - குறிப்பாக அம்பாறை, கல்முனை, மூதூர் பிரதேசங்களில் -தமிழ் மக்களுக்கு எதிரான படுமோசமான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் ஸ்ரீலங்கா அரச படைகளும் அதன் பின்னணியில் இருந்த ஜிகாத் போன்ற ஆயுதக் குழுக்களுமே செயற்பட்டன. இச்செயல்களில் அப்பாவி இஸ்லாம் சகோதரர்கள் சம்பந்தப்படவில்லை என்பது யாவருக்கும் நன்கு தெரியும். குறிப்பாக திருகோணமலை மாவட்டம் மூதூர் நகரத்தை வாழ்விடமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட தமிழ் மக்களை சுட்டும், வெட்டியும் வீடுகளைத் தீக்கரையாக்கியும் அவல வாழ்க்கைக்கு உள்ளாக்கியவர்கள், ஸ்ரீலங்காவின் இராணுமும் அதனோடு இணைந்த ஜிகாத் குழுவுமே என்பதை தமிழ் மக்கள் மட்டுமல்ல இஸ்லாமிய மக்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

திருகோணமலையைப் பொறுத்தவரையில் திருகோணமலை மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் - குறிப்பாக கிண்ணியா, குச்சவெளி, இறக்கக் கண்டி, நிலாவெளி போன்ற பிரதேசங்களில் வாழுகின்ற இஸ்லாமிய மக்களும், தமிழ் மக்களும் எந்தக் காலத்திலும் எவ்வித பிரச்சினையுமின்றி வாழ்ந்தும் வந்துள்ளனர், வாழ்ந்தும் வருகின்றனர். ஆனால் மூதூர் பிரதேசத்திலுள்ள ஜிகாத் அமைப்பைச் சேர்ந்த[illegible] காலங்காலமாக அரச படைகளுடன் இணைந்து தமிழ் மக்கள் மீதான தாக்குதலை முன்னின்று நடத்துவதனை இஸ்லாம் மக்களும் ஏற்றுக்கொள்வார்கள்.

இனந்தெரியாத நபர்களால் ஒருவர் சுடப்பட்டார் என்ற செய்தி கிடைத்ததும் அப்பாவித் தமிழ் மக்களைக் கண்டதுண்டமாக வெட்டிக்கொன்றதுடன் ஒருவர் வெட்டப்பட்டு ஓட்டோவினுள் போட்டு எரிக்கப்பட்டுள்ளார். இதுவே தற்போதைய பதற்றமான சூழ்நிலைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

கிழக்கு மாகாணத்தில் அக்கரைப்பற்று, காத்தான்குடி பிரதேசத்தில் இனந்தெரியாதோரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், அங்கு மோசமான பதற்றநிலை ஏற்பட வழிவகுத்தன. இச்செயல்களின் பின்னணியில் இருக்கின்ற சதியைக் கண்டறியாமல் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்ற எண்ணக் கருத்தோடு தமிழ் மக்கள் மீது தேவையற்ற விஷமத்தனங்களைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் எமது தாயக மண்ணின் அமைதி குலைக்கப்பட்டு இரண்டு சிறுபான்மையினத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் துயரத்தில் துடிக்க வேண்டிய நிலையே ஏற்படும். இரண்டு சிறுபான்மையினங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைப் பார்த்து பேரினவாதிகளும் உள்ளூற மகிழ்ச்சியடைவார்கள். ஏனென்றால் இதன் மூலம் நூறு வீதம் நன்மையடைபவர்கள் அவர்களே.

கடந்த காலங்களில் இஸ்லாம் மக்களுக்கெதிரான தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றமையும் யாழ்ப்பாணத்திலிருந்து இஸ்லாமிய மக்கள் தற்காலிகமாக வெளியேற்றப்பட்டமையும் துன்பகரமான நிகழ்வுகள் என்பதனை எல்லோரும் ஏற்றுக் கொண்டு சமாதான ஒப்பந்தம் உருவான பின் இரண்டு சிறுபான்மையினங்களும் புரிந்துணர்வின் அடிப்படையில் சந்தோஷமாக வாழுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இஸ்லாம் மக்களும் தங்களுக்கிடையே ஏற்படுகின்ற பிரச்சினைகளை இயன்றளவு சுமுகமாகப் பேசித் தீர்த்து இஸ்லாமிய - தமிழ் மக்களின் உறவு மேம்பட்டு வந்த சூழ்நிலையில் இத்தகைய ஒருமைப்பாடு தொடருமாயின் அது பேரினவாதத்திற்குப் பாதகமாக அமையுமென்று கருதி, இரண்டு சிறுபான்மையினங்களையும் மோதவிடும் அராஜகச் செயல்களை ஸ்ரீலங்கா இராணுவத்துடனுள்ள ஒட்டுப்படைகளைக் கொண்டு கனகச்சிதமாக நிறைவேற்றப்படுகின்றன.

இந்நிலையில் தமிழ், இஸ்லாமிய சகோதரர்கள் நிதானித்து, உணர்ச்சிக்கு இடங்கொடுக்காது, தீர்க்கதரிசனமான சிந்தனையுடன் செயல்பட வேண்டும்.

இச்சதிவலையின் பின்னணியில் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களை சமூகத்திற்கு இனங்காட்ட வேண்டும். எனவே, சிறுபான்மையினமாகிய தமிழ், இஸ்லாம் சமூகங்களுக்கு மத்தியில் ஒருமைப்பாட்டைத் தொடர்வதற்கான உடனடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென சமாதானத்தை விரும்பும் சக்திகளை வேண்டுகின்றோம். பௌத்த பேரினவாதம் சிறுபான்மையினங்களை அடக்கி ஆளுவதற்கு வழிசமைக்காதீர்கள் என அன்புடனும் தாழ்மையுடனும் கேட்டுக் கொள்கின்றோம். - என்று உள்ளது. (க)


World Vision

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகள் அமைத்தலுக்கான ஒப்பந்தகாரர்களுடனான சந்திப்பு

வேள்ட் விஷன் நிறுவனமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் 500 தொடக்கம் 580 சதுர அடி பரப்பளவைக் கொண்ட புதிய வீடுகளை நிர்மாணிக்க இருக்கின்றது.

ஆகவே மேற்குறிப்பிட்ட வீடுகளை அமைப்பதற்கான ஒப்பந்தகாரர்கள், கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுவதற்காகத் தாங்கள் எதிர்வரும் மார்கழி மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**வேள்ட் விஷன் லங்கா**

நெடுங்கேணி வீதி,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

முக்கிய குறிப்பு: ஒப்பந்தகாரர்கள் சுயவிவரக் கோவையையும் தேசிய அடையாள அட்டையினையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

[சி/46467] [21.19.17]


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 1936 04 02

உதிர்வு 2002 12 09

**அமரர் மாணிக்கர் சின்னத்துரை**

(இளைப்பாறிய உப அதிபர் - யா/ குப்பிளான் விக்கினேஸ்வரா ம.வி.)

*திதி: 06.12.2005*

*அன்பின் அப்பாவே!*
*எம் கண் கண்ட தெய்வமே!*
*உங்கள் பாத மலர்களை*
*என்றும் நாம் பணிவோம்.*

"சிவகிரி"
கேணியடி, குப்பிளான்,
ஏழாலை.
(43590)(51)

**அன்பு மனைவி,
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளை.**

## 06.12.2005 முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




அனலைதீவைச் சேர்ந்த
**திரு.திருமதி உதயதாஸ் -உஷா**
தம்பதியினரின் செல்வப்புதல்வி செல்வி **திவ்யா**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, பூட்டன், பூட்டி, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், பெரியம்மம்மா, அண்ணாமார், அக்காமார், அத்தைமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் அலை ஐயனாரின் அருள் பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றனர்.

ஆறுகால்மடம்.
ஆனைக்கோட்டை.

தகவல்:
ஆசை சித்தப்பா க.[illegible]

(43593) (39-11-19)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

06.12.2005
**பவித்திரா**



பொற்பதி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட தயாபரன் - சோபனா தம்பதியரின் அருந்தவப் புதல்வி பவித்திரா (பவி) அவர்கள் தனது முதலாவது பிறந்த நாளை இன்று(06.12.2005) செவ்வாய்க்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை பெரிய தெய்வம் அருள் பெற்று பல்கலையும் கற்று சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்தும் அன்புள்ளங்கள் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பிரபாச்சித்தா (டோகா), கிருபாச் சித்தா(டோகா), அபிரா அத்தை,நிஷாச்சித்தி (கொழும்பு), கண்ணன் மாமா, அம்மப்பா, அம்மம்மா, மாமன்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

மு.சிவபாதம்
வீரவகுல வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

தகவல்
[illegible].பிரபாச்சித்தா, (டோகா)
கிருபாச்சித்தா (டோகா)

(43481)(51-)


# மனோதத்துவ வைத்தியம்
# (GENERAL PSYCHO THERAPY)
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

05-12-2005 - 11-12-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!
* சக்தி குறைவு * ஞாபக மறதி * பயம் * நடுக்கம்
* நித்திரைக் குறைவு * ஆண்மைக் குறைவு * நீரிழிவு நோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
**பிரபல மனோதத்துவ நிபுணர்**
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-41917) (21-11-14)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 02 1938

மறைவு 17 11 2004

திருமதி **சுந்தரலிங்கம் பரிமளகாந்தி** [பவளம்]

*திதி: கார்த்திகை மாத பூர்வ பட்ச ஷஷ்டி 06.12.2005*

ஆயிரம் உறவுகள் இருந்த போதும்
அம்மா என்றழைக்க இன்று நீங்கள் இல்லையே
சிறுவயதில் தந்தையை இழந்த எங்களுக்கு
தாயாகவும் தந்தையாகவும் நின்று படிக்கவைத்து
நல்ல பண்பாளராக ஊரார் போற்றும்
உத்தமராக வளர்த்தீர்களே அம்மா!
என்றென்றும் மாறாதம்மா உங்கள் நினைவு.

"பவள வாசா"
கலட்டி லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(43506)(51)

*உங்கள் நினைவில் ...*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,*
*தகவல்: S.S சச்சி (மருமகன்).*

# தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் கொல்லப்பட்டால் பதிலுக்குப் படையினரைக் கொன்றே தீருவோம்!

## 'பொங்கி எழும் மக்கள் படை' எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.6

தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்துவதற்காக தமிழ்த் தேசிய உணர்வாளர்களைக் கொலைசெய்வதை இனிமேலும் அனுமதிக்க மாட்டோம்.

'பொங்கியெழும் தமிழீழ மக்கள் படை' என்ற அமைப்பு இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்குக் காரணமான ஆக்கிரமிப்புப் படையிலும், ஒட்டுக் குழுக்களிலும் பலர் கொல்லப்படுவார்கள். பதிலுக்குப் பதிலாக நடடவடிக்கை எடுப்போம் - என்றும் அந்தப் படை அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக 'பொங்கியெழும் தமிழீழ மக்கள் படை' என்ற பெயரில் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் தாயகத்தில் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தொடர்ந்துவரும் இராணுவ வன்முறைகள், படுகொலைகள், உயிர்க் கொலை அச்சுறுத்தல்கள் மற்றும் இராணுவ நெருக்குவாரங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்வதனால் மக்களின் இயல்பு வாழ்வு சீர்குலைக்கப்பட்டு நெருக்கடியான நிலை உருவாக்கப்பட்டுவருகின்றது. இந்நடவடிக்கைகளுக்குக் காரணமாக ஸ்ரீலங்காப் படைத்தரப்பும், ஸ்ரீலங்காப் புலனாய்வுப் பிரிவினரும், ஒட்டுக்குழுக்களுமே இருக்கின்றனர்.

இதன் உச்சக்கட்டமாக சிங்கள பௌத்த பேரினவாத சக்திகளைத் திட்டமிட்ட அடிப்படையில் தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்துவதற்குத் தமிழ்த் தேசிய உணர்வாளர்களையும், அறிஞர்களையும் அழிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுகின்றன. இந்தவகையில் 20ஆம் திகதி நெடுந்தீவிலும் 24ஆம் திகதி நீர்வேலியிலும் 26ஆம் திகதி ஊர்காவற்றுறை தம்பாட்டியிலும் படுகொலை முயற்சிகளும் கொலைகளும் நடத்தப்பட்டுள்ளன.

நீர்வேலியில் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மீது இராணுவப் புலனாய்வுத்துறையினரும், இராணுவ ஒட்டுக் குழுவான ஈ.பி.டி.பி.யினரும் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த தமிழீழத் தேசிய உணர்வாளர்களைத் தொடர்ந்தும் கொலை செய்வதற்கு இனிமேலும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம். தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்குக் காரணமான ஆக்கிரமிப்புப் படையிலும், ஒட்டுக் குழுக்களிலும் பலர் கொல்லப்படுவார்கள். பதிலுக்குப் பதில் நடவடிக்கைக்ளைப் பொங்கியெழும் தமிழீழ மக்கள் படையாகிய நாங்கள் மேற்கொண்டே தீருவோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீதி விளக்குகளுக்கு தானியங்கி ஆழி பொருத்துவதற்கு நிதிப் பற்றாக்குறை

## மின்சார சபை அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ். மாவட்டத்தில் வீதி விளக்குகள் சீராக ஒளிர்வதற்கு வசதியாக அவற்றுக்கு தானியங்கி ஆழிகளைப் பொருத்துவதற்கு நிதிப்பற்றாக்குறையாக உள்ளது.

இலங்கை மின்சார சபையின் யாழ்.அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வீதி மின் விளக்குகள் பகல் நேரங்களில் ஒளிர்வதனைக் கட்டுப்படுத்துவதற்கு 'சோலர் செல்' என்னும் தானியங்கும் ஆழி பொருத்தப்பட்டிருக்கின்றது. இவை சில பிரதேசங்களில் பழுதடைந்து விட்டன. இதனாலேயே பகல் நேரங்களிலும் மின் விளக்குகள் ஒளிர்கின்றன.

இதன் செயற்பாடுகளால் மின்விரயமும் ஏற்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நிதிப்பற்றாக்குறை பெரும் தடையாகவுள்ளது. ஆனாலும், இக்குறைபாட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ-14)




# கால்நடை நோய்களை முற்றாக ஒழிக்க இரண்டு ஆண்டுத் திட்டம்

யாழ்.மாவட்டத்தில் கால்நடை நோய்களை முற்றாக ஒழிப்பதற்கு இரு ஆண்டு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களத்தினால் இந்த வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்குட்பட்ட சகல வைத்திய அதிகாரிகள் அலுவலகங்கள் ஊடாகவும் கால்நடைகள் அனைத்துக்கும் நோய்கள் வராது தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

கோழிகளுக்கான பணிக்கல் நோய், நாய்களுக்கான விசர் நோய், மாடுகளுக்கான கால் வாய் நோய் ஆகியவற்றுக்கான தடுப்பூசிகள் தொடர்ச்சியாக ஏற்றப்படவுள்ளன. இந்த இரண்டு ஆண்டுத் திட்டத்தில் சகல கால்நடைகளுக்கும் தடுப்பு மருந்துகளை வழங்கி நோய்களை முற்றாக ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் பொ.இராமநாதன் தெரிவித்தார். (ஐ-180)

# பெண்கள் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், டிசெ.6

தேவை நாடும் மகளிர் அமைப்பும் (WIN) அகதிகளுக்கான ஐ.நா.தூதரகமும் (UNHCR) இணைந்து மாதர் சங்கங்களுக்கான பால், பால்நிலை அடிப்படையிலான பெண்கள் மேம்பாட்டு பயிற்சிப் பட்டறைகளை நடத்திவருகின்றன. உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, தெல்லிப்பழை ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளின் மாதர் சங்கங்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் -

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மருதங்கேணி, காரைநகர் ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளின் மாதர் சங்கங்களுக்கு நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரையும் - பயிற்சிப் பட்டறைகள் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணக் கல்லூரி புறநிலைப் படிப்புகள் அலகில் நடத்தப்படவுள்ளது. (ஐ-202)

# சேர் பொன். இராமநாதனின் நினைவு நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.பல்கலைக்கழகத்தின் அத்திபாரமாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநரும் சைவப் பெருவள்ளலுமான சேர் பொன். இராமநாதனின் குருபூசைத் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு ஸ்ரீபரமேஸ்வரன் ஆலயத்தில் 108 சங்காபிஷேகமும் விசேட பூசையும் நடைபெறும்.

காலை 8.30 மணிக்கு சேர் பொன். இராமநாதன் திருவுருவச் சிலைக்கும் உருவப்படத்திற்கும் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் மலர்மாலை அணிவிக்க அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

காலை 9 மணிக்கு சேர் பொன். இராமநாதன் வேதாகம நிறுவன மாணவர்களின் வேத பாராயணம், திருமுறை ஓதல் என்பவற்றுடன் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இடம்பெறும். இந்நிகழ்வுகள் யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளன. (ஐ-202)

# வலி.தென் மேற்கில் கலைஞர்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணி

வலி.தென்மேற்கு, டிசெ.6

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் கலைஞர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கலைஞர்கள், இயற்கை எய்திய கலைஞர்கள், வெளிநாடுகளுக்குச்சென்று வாழும் கலைஞர்கள், இடம்பெயர்ந்த கலைஞர்கள், ஆற்றும் கலைக்கும் ஆற்றுகைக் கலைக்கும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்கள் ஆகியோரின் விவரங்களே பிரதேச செயலகத்தினால் தற்போது திரட்டப்பட்டுவருகின்றன.

யாழ். மாவட்ட கலாசார பேரவையினால் விரைவில் வெளியிடப்படவுள்ள யாழ். மாவட்ட கலைஞர்களின் விவரத்திரட்டில் இப்பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த கலைஞர்களின் விவரங்களையும் சேர்ப்பதற்காகவே இந்த விவரங்கள் திரட்டப்பட்டுவருகின்றன என்று பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார். எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான படிவத்தைப் பூர்த்திசெய்து விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-135)

# கிணறுகளுக்கு 'குளோரின்'

வலி.தென்மேற்கு,டிசெ.6

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் பொதுக்கிணறுகளுக்கும் வீட்டுக் கிணறுகளுக்கும் 'குளோரின்' போடப்பட்டு வருகின்றது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது இப்பகுதியில் உள்ள கிணறுகள் பலவற்றில் வெள்ள நீர் புகுந்துள்ளதால் இதன் மூலம் தொற்று நோய்கள் பரவும் சாத்தியமிருப்பதால் கிணறுகளுக்கு 'குளோரின்' மருந்து போடப்பட்டுவருகின்றது.

வீட்டுக் கிணறுகளுக்கும் பொதுக்கிணறுகளுக்கும் சுகாதாரத் தொண்டர்களினால் பொதுச் சுகாதார பரிசோதகர் என்.நிர்மலானந்தன் மேற்பார்வையில் குளோரின் இடும் பணி இடம்பெற்றுவருகின்றது. (ஐ-135)

# வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்

இத்திட்டத்திற்கான பயனுகரிகள் முன்னுரிமைப் பட்டியல் பிரதேச செயலர்/உதவி அரசாங்க அதிபரினால் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கிராமிய புனரமைப்புக்குழு அல்லது ஒரு நிறுவனம் அல்லது தனிநபர் எழுத்து மூலம் பிழையான தெரிவு தொடர்பாகவோ அல்லது விடுவிக்கப்பட்ட பயனுகரி தொடர்பாகவோ முறைப்பாடு செய்யலாம்.

**1. பிரதேச மட்டம்:-** பயனுகரிகள் பட்டியல் பொது மக்கள் பார்வைக்கு பகிரங்கப்படுத்தப்பட்டு இரண்டு வார காலத்துள் எழுத்து மூலம் தமது ஆட்சேபனை மனுவை பிரதேச செயலருக்கு / உதவி அரசாங்க அதிபருக்கு சமர்ப்பிக்கவேண்டும். பெயர்ப்பட்டியல் பகிரங்கப்படுத்தப்பட்டு இரண்டு வார காலம் தாழ்த்தி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**2. மாவட்ட மட்டம்:-** பாதிக்கப்பட்டவர்கள் பிரதேச செயலர்/உதவி அரசாங்க அதிபரது பதிலில் திருப்தியடையாதவிடத்து அதனையும் குறிப்பிட்டு அரசாங்க அதிபருக்கு தங்கள் மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்கலாம்.

**3. மாகாண மட்டம்:-** முறையீட்டாளர் மாவட்ட மட்டப் பதிலில் திருப்தியடையாதவிடத்து வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்ட அலகு வடக்கு - கிழக்கு மாகாணம் திருகோணமலைக்கு முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கலாம். வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளரின் முடிவே இறுதியான முடிவாகும்.

(சி/46378) (30-34-16)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கடைக்கு பாவிக்கக்கூடிய ஒரு நிலைக் கதவு பாலை 5/6, 6½' X 9' அளவுடையது முழுமையாக நல்ல நிலையில் உடன் விற்பனைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை பார்வையிடலாம். தொடர்பு: No.57, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0779063030. (43610)

## தவறிவிட்டது

2 ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை என்ற முகவரியை உடைய இராசகுலசிங்கம் நந்தரூபன் என்பவருடைய தே. அ. அட்டை (இல.862542193V) கடந்த 02.12.05 சுண்டிக்குளிக்கும் வேலணைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். 4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை. (43611)

வரணி இயற்றாலையைச் சேர்ந்த மார்க்கண்டு கெளசலா என்பவரது தேசிய அடையாள அட்டை(846632930V யாழ்ப்பாணத்திற்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 0777 112441 என்ற T.P. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (43607)

வசாவிளான் மேற்கு, வசாவிளான் என்ற முகவரியை உடைய விஸ்வர் சுவஞ்சா என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அ.அட்டை என்பன முகமாலைக்கும் நுணாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். ரயர் கம்பனி, கைதடி நுணாவில், கைதடி. (43619)

**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை,* **மானிப்பாய்,** 077-6279671, 077-3253104.

(43247)(21.32.17.16)

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் சந்திக்கு அருகில் கோப்பாய் வீதியில் 4 பரப்பும் 2 ½ குழியும் உடைய காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777730570 முகவரி: கணேசு கமலேஸ்வரன், இணுவில் மேற்கு, இணுவில். (43541)

இல.211, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள 3 பரப்புக் காணியுடன் வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 222 - 2326, 0777111362 (தரகர் தேவையில்லை.(43612)

## திருமண சேவை

எம்மிடம் அனைவரின் உள்நாட்டு, வெளிநாட்டு அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் இந்து, கிறிஸ்தவ மணமக்களின் ஜாதகங்களின் உள்ளன. தொடர்பு: கல்யாண வேலன் திருமண சேவை, இல:72, கச்சேரி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (43620)

## முன்னோடிக் கருத்தரங்கு

ஜி.சீ.ஈ.சாதாரண தர பரீட்சையில் வர்த்தகப் பாடத்திற்கு தோற்றும் மாணவர்களுக்கு இலங்கை வங்கி பாடசாலை ரீதியில் கருத்தரங்குகளை நடத்திவருகின்றது.

இதன் அடிப்படையில் கடந்தவாரம் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் நூறுக்கும் அதிகமான சாதாரண தர மாணவர்கள் கலந்துகொண்டனர். ஏற்கனவே, யாழ்.இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது. இக்கருத்தரங்குகளில் இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக்கிளை பிரதான முகாமையாளர் என். சிவரத்தினம், உதவி முகாமையாளர் பி.பிரான்சிஸ் ஆகியோர் கலந்துகொண்டு வங்கி தொடர்பாக கருத்தரங்குகளை நடத்தினர்.

இக்கருத்தரங்குகளை இலங்கை வங்கியின் பாடசாலை மாணவர் சேமிப்புப் பிரிவின் இணைப்பதிகாரி வி.ஆர்.சுதாகரன் ஏற்பாடு செய்திருந்தார். (எ-12)

## தொழிற்சாலை புனரமைப்புக்கு நிதி உதவி

பண்டத்தரிப்பு பனை- தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் பெரியவிளானிலுள்ள தொழிற்சாலைக் கட்டடப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. கஜேந்திரகுமார் 50 ஆயிரம் ரூபா நிதியை இந்த வருட பன்முகபடுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார். (ஐ-135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*அகில இலங்கை சமாதான நீதிவானாக 30.11.2005 புதன்கிழமை அன்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட கோண்டாவில் மேற்கு தமிழ் வேதபாராயண சனசமூக நிலையத் தலைவர்*

**திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தியை**

எமது நிலையம் சார்பாக மனமார பாராட்டி வாழ்த்துகிறோம்.

இவர் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகவும் கோண்டாவில் மேற்கு இலவச முன்பள்ளியின் நிர்வாகியாகவும், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கத் தலைவராகவும் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை-8 தலைவராகவும் இருந்து சமூகத்திற்கு ஆற்றிவரும் சேவைகள் மேலும் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(43614)
(39.21.16.17)

**நிர்வாகசபை,**
*தமிழ் வேதபாராயண சனசமூக நிலையம்.*

## துயர் பகிர்கின்றோம்



*எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்*
**அமரர் வி.சிவசுப்பிரமணியம்**
*அவர்களது புதல்வனும்*
*எமது கல்லூரி ஆசிரியை*
**திருமதி சிவலோசனாதேவி தவராஜா**
*அவர்களது சகோதரனுமாகிய,*

**சி.சிவரட்ணம் J.P.**

(விலை மதிப்பீட்டாளர்)

அவர்கள் சிவபதமடைந்த செய்தியறிந்து, ஸ்கந்தா சமூகம் ஆழ்ந்த கவலை அடைகின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.
2005.12.05

(43618)

## தொல்புரம் வீதி பலத்த சேதம்

தொல்புரம் மூங்கோடை வீதி நீண்டகாலமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

தொல்புரம், வட்டு-பிளவத்தை ஆகிய கிராமங்களை 786 பிரதான வீதியுடன் இணைக்கும் இந்த வீதி மிக நீண்ட காலமா கத் திருத்தப்படாது குண்டும், குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால், மழைகாலத்தில் மழைநீர் தேங்கி நிற்பதுடன், வீதிசேறும், சகதியுமாககக் காணப்படுகின்றது. அத்துடன் வீதியோரமாக வளர்ந்துள்ள பற்றைகள் வீதியின் அரை வாசிப் பகுதியை ஆக்கிரமித்துள்ளதால் இந்த வீதியால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.(எ-119)

## கல்விப் பணிப்பாளர் நியமனம்

தென்மராட்சி கல்வி வலயத்தின் புதிய கல்விப் பணிப்பாளராக திருமதி எ. வேதநாயகன் பொறுப்பேற்றுள்ளார்.

வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய திருமதி றெஜினா இருதயநாதன் கடந்த செப்ரெப்பர் மாதம் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டவர் இவர் கடந்த 28 ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-117)

## ஆசிரியர்பீட நிர்வாக உதவியாளர்

ஆசிரியர்பீட நிர்வாக அலுவலகங்களைக் கவனிப்பதற்கு உதவியாளர் ஒருவர் தேவை. நிர்வாக அலுவல்களில் மட்டுமன்றி ஒரு செயலாளருக்கு உரிய பணிகளைச் செய்வதிலும் அனுபவம் உள்ளவர்கள் பெரிதும் விரும்பப்படுவர்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த தேர்ச்சி பெற்றிருப்பதுடன் தொடர்பாடல், இணைப்பாளர் பணிகளிலும் பயிற்சியுள்ள, சொந்தத்தில் பணியாற்றும் ஆற்றலும் திறமையும் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். வயதெல்லை 40 முதல் 55 வரை.

பத்திரிகைப் பணிமனை ஒன்றில் இதே வகைப் பணிகளை செய்தவர்களுக்கும், யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

உங்கள் முழுமையான சுயவிபரங்களுடன் 10.12.2005க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். அஞ்சல் உறையின் இடது பக்க மூலையில் பதவிப் பெயரைக் குறித்து, கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**உதயன் மனிதவள சேவை,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

**வடக்கு - கிழக்கு மாகாண சபை**

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் - II (நீகோட் - II)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆ.அ.வ கடன் இல:- 2168-சிறீ (எஸ்எவ்)

## கேள்வி அறிவித்தல் - இல: 63

### *குடிசார் வேலைகளைப் பெறுதல்*

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம (NECORD-II) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாணவேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. **25%** பண உதவியானது சுகாதார பராமரிப்பு அபிவிருத்தி அமைச்சில் இருந்து பெறப்படுகின்றது.
2. இதன் பின்னால் தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச்சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD-II/HS/02 | யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை ஐந்து மாடி விடுதிக்கட்டடத்தை முழுமையாக்குதல். | M3 கட்டடங்கள் | 1,046,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும்.இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தக்காரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை *திட்டப்பணிப்பாளர், நீகோட் திட்டம், 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில* பெற்றுக்கொள்ளலாம்.(தொலைபேசி: 026-2227434. /பக்ஸ்: 026-2227401. இணையதள முகவரி: www.necord.org ஈமெயில்: necord@sltnet.lk )
6. கேள்வி ஆவணங்களை 05.12.2005 இலிருந்து 19.12.2005 வரை காலை 9.30 மணியிலிருந்து மாலை 3 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா. 15,000/- ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிபபிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் *தலைவர், திட்ட கேள்விச்சபை, "நீகோட்", 55, கந்தசாமி கோயில் வீதி, திருகோணமலை* என்ற விலாசமிடப்பட்டு 03.01.2006 பி.ப 2.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
9. முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 19.12.2005ஆம திகதி அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**சி. ரங்கராஜா**
**பிரதம செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாண சபை,**
**ஆளுநரால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபை தலைவர்,**
**திருகோணமலை.**

(C/46627)(21.16.17)

# ஹாட்லி, மெதடிஸ்த மாணவர்கள் நேற்றுப் பகிஷ்கரிப்பு பொலீஸார் கண்ணீர்ப் புகை வீச்சு! அதனால் களேபரம்!!

## இராணுவம் மண் அணை அமைப்பதற்கு எதிர்ப்பு!

கரவெட்டி,டிசெ.6

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற் றும் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இருவர் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்டு தாக்கப்பட்டனர் எனக் கூறப் படும் சம்பவத்தைக் கண்டித்தும் -

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற் றும் மொதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றின் அருகில் இராணுவப் பாதுகாப்பு அரண்கள் புதுப்பிக்கப்படு வதை ஆட்சேபித்தும் -

நேற்று வடமராட்சிப் பிரதேச மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

வகுப்புகளுக்குச் செல்லாமல் பகிஷ்கரித்து கல்லூரிகளுக்கு வெளியே திரண்ட மாணவர்கள் பின்னர் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின் போது மாணவர்களைக் கலைப்பதற்காகப் கலகமடக்கும் பொலீஸாரும், படையினரும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதால் அங்கு பெரும் களோபரம் ஏற்பட்டது.

நேற்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமானஇப்போராட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் உட்பட வடமராட்சிப் பிரதேச பாடசாலைகள் பலவற்றைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்றனர்.

போராட்டம் நீடித்ததை அடுத்து முற் பகல் 10 மணிய ளவில் இராணுவத்தினரும் பருத்தித்துறைப் பொலீஸாரும் இணைந்து சமரச முயற்சியில் இறங்கினர். ஹாட்லிக் கல்லூரியின் அதிபர் எம்.இராஜேஸ்கண்ணா தலைமையில் ஒரு குழுவினர் ஊடாக மாணவர்களோடு பேசி போராட்டத்தை கைவிடு மாறு கோரினர்.

மேற்படி குழுவினர், மாணவப் பிரதிநிதிகளுடன் சுமார் இரண்டு மணித்தியாலயங்களாக ஆலோசனை நடத்தினர்.

ஆலோசனையின் போது மாணவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மகஜராகத் தயாரிக்கப்பட்டு ஹாட் லிக் கல்லூரியின் பிரதான வாயிலில் வைத்து ஹாட்லிக் கல்லூரி அதிபரால் பருத்தித்துறைப் பொலீஸ் அத்தியட்சகர் ஐ.பி.கவாரிடம் கையளிக்கப் பட்டது.

மகஜரில் காணப்படும் விடங்கள் தொடர்பாக விசாரித்து விரைவாக - நியாயமான நடவடிக்கை மேற்கொள் வதாகப் பொலீஸ் அத்தியசட்சகர் உறுதி அளித்தார்.

ஏனைய இராணுவ உயர் அதிகாரிகளுடன் இது குறித்து ஆலோசித்து சில விடயங்களுக்குத் தீர்வுகாணவேண்டியுள்ளதால் தமக்கு கால அவகாசம் தேவை எனவும் பொலீஸ் அத்தியட்சகர் கேட்டுக் கொண்டார்.

பொலீஸ் அதிகாரியின் வேண்டுகோளை மாணவர்கள் ஏற்றுக்கொண்டதையடுத்து முற்பகல் 11 மணியளவில் மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட இருந்தது.

மாணவரின் போராட்டத்தை முடிவுக் குக் கொண்டுவருவதற்கான சமரச முயற்சிகள் ஒருபுறத்தில் நடைபெற்ற சமயம் மறுபுறத்தில் மாணவர்களும் பொலீஸார் மற்றும் படையினரும் மோதினர்.

இரண்டு தரப்பினரும் கற்கள், போத் தல்கள் மற்றும் தடிகளை வீசித்தாக்கிக் கொண்டனர்.

பொலீஸார் பெரும் எண்ணிக்கையான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். அவற்றை ஈரச்சாக்குகள் கொண்டு மாணவர்கள் மூடிவிட்டனர். இதனால் மாணவர்களைக் விரட்டும் பொலீஸாரின் முயற்சி தோல்விகண்டது.

நண்பகல் 1.30 மணி தாண்டிய நிலையிலும் மாணவர்கள் அங்கு திரண்டு நின்று எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நண்பகலில் கண்காணிப்புக் குழுவின் வாகனம் ஒன்று அப் பகுதிக்கு வந்தது. மாணவர்கள் அதனை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாணவர்களின் போராட்டம் காரணமாக அப்பகுதியில் பதற்றம் நீடிக்கிறது.

பாடசாலைகளின் சுற்றாடலில் வசிக்கும் சில குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி வெளியேறின.

(ஐ-70-86-202-15)

## பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் மாணவர்களின் சுலோகங்கள்

கரவெட்டி,டிசெ.6

நேற்றுப் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் முன்பாக வடமராட்சிப் பாடசாலை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டத்தின் போது மாணவர்கள் சுலோக அட்டைகளை வைத்திருந்தனர்.

அந்தச் சுலோக அட்டைகளில் காணப் பட்ட வாசகங்களில் சில வருமாறு:-

* இராணுவமே! உனது அடாவடித் தனம் எம் மத்தியில் ஆயுதம் ஏந்தும் நிலையை உருவாக்கும்!
* போரின் வலியை உணர்ந்தவர் நாம்.
* மீண்டும் நிழல் யுத்தமா?
* எமது போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து செயல்படு! இன்றேல் நாம் வெடிகுண்டாக மாறும் நிலை எற்படும்!.

(ஐ-70-202)





சுலோக அட்டைகளுடன் திரண்ட மாணவர்கள்...



சுலோகங்களில் ஒன்று....



மகஜர் கையளிப்பு...



கண்காணிப்புக் குழு வாகனம் வழிமறிப்பு..



இராணுவக் காவலரண் பகுதி...

படங்கள் : எஸ்.சுந்தரலிங்கம், நேசன்.



வீதியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் மாணவர்கள்....

# பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,டிசெ.6

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் புதிதாக நியமனம் பெற்ற நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கான செயற்றிட்டமிடல் தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் மூன்று தினங்கள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

புதிதாக நியமனம் பெற்றவர்களின் திட்டமிடல் தொடர்பான ஆற்றலை மேம்படுத்தும் நோக்குடன் இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-203-204)


## கண்ணீர் அஞ்சலி

எமது மாவட்ட நிர்மாண உத்தரவாத நிதியத்தின் முகாமையாளர் உயர்திரு.

**கிருஸ்ணபிள்ளை துரைராஜா**

அவர்கள் 04.12.2005 அன்று காலமானதையிட்டு எமது அஞ்சலியினை தெரிவிக்கின்றோம்.

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எஸ்.எம்.எந்திரிகள்,
நேசன் பில்டர்ஸ்
(பிறைவேற் லிமிட்டட்).

(43632)(21.32.16.19)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராசரத்தினம்

காரைநகர், நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசரத்தினம் (இளைப்பாறிய இலிகிதர், நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்கள் 03.12. 2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சண்முகரத்தினத்தின் சகோதரரும் தேவகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவகுமார் (செயற்றிட்ட அலுவலர், மாகாணக் கல்வி அமைச்சு, திருகோணமலை), ஆனந்தகுமார் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகரூபி, பிரகலா ஆகியோரின் அன்பு மாமனாரும் சேதுநாயகி, கோமதி, பார்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவரூபினி, சிவராஜி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2005 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, திருகோணமலை இந்துமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தகவல்:*
திருமதி தேவகி இராசரத்தினம்,
24/41, கன்னகிபுரம், உவர்மலை,
திருகோணமலை. (அ.46636) (39.32.16.19)

**மனைவி,
பிள்ளைகள்.**

## நல்லூர் பிரதேசசபை
## சந்தைகள் குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2006

28.10.2005, 09.11.2005, 24.11.2005 ஆம் திகதிய உதயன், தினக்குரல்,ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளில் செய்யப்பட்ட விளம்பரங்களுக்கு அமைவாக பின்வரும் சந்தைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி என்னால் கோரப்படுகின்றது.

| விவரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய (வற் தவிர்ந்த ஆகக் குறைந்த தொகை) |
|---|---|
| *01. திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்* | *ரூபா 3,950,615.00* |
| *பலாலி வீதி,ஆடியபாதம் வீதி,பாடசாலை வீதி, வாகனத் தரிப்பிடக் கட்டணம் (வாகனத் தரிப்பிட குறியிட்டில் மட்டும் நிறுத்துதல் வேண்டும்).* | *ரூபா 100,000.00* |
| *02. கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்* | *ரூபா 179,073.00* |

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 09.12.2005 வெள்ளி நண்பகல் 12 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:-12.12.2005 திங்கள் நண்பகல் 12 மணிவரை

கேள்வி திறக்கும் திகதி:-12.12.2005 திங்கள் பிற்பகல் 2 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பொன்னையா வைரமுத்து,**
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை.

திருநெல்வேலி
05.12.2005

(அ/46632)(42-32-34-16)


# வெள்ளத்தினால் 36 குடும்பங்கள் பாதிப்பு

தென்மராட்சி,டிசெ.6

நாவற்குழி பள்ளம் பகுதியில் மழை வெள்ளத்தில் 36 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உள்ள குளம் ஆழமாக் கப்படாததாலும் தண்ணீர் செல்லும் வாய்க்கால்கள் மூடி வீதி அமைக்கப்பட்டதாலும் வெள்ள நீர் வழிந்தோட முடியாமல் வீடுகளுக்குள் புகுந்து பாதிப்பு ஏற்படுத்தியதாகவும் -

இதனால் இந்தக் குடும்பங்கள் வேறு இடங்களில் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

# சமுர்த்தி முத்திரை ஒப்படைக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.6

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கு அந்தந்தப் பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் வழங்கப்பட்ட சமுர்த்தி முத்திரைகளை உடனடியாகத் தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் மீள ஒப்படைக்குமாறு கோப்பாய்ப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (எ)

# வீதி விளக்குகள் விசமிகளால் சேதம் அதிகாரி கவலை

யாழ்ப்பாணம்,டிசெ.6

வீதி மின் விளக்குகள் விசமிகளால் சேதமாக்கப்படுவதே வீதி மின் விளக்குகள் ஒளிராமைக்குக் காரணம் என மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிக்கொட் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சோடியம் வீதி மின் விளக்குகளே பிரதான வீதிகளிலும், சந்திகளிலும் பொருத்தப்பட்டுள்ளன. அவை மிகவும் விலை கூடிய மின் விளக்குகள் ஆகும்.

அவ்வாறான மின் விளக்குகளைக்கூட விசமிகள் சேதப்படுத்தி வருகின்றனர். சிலர் மின்விளக்குளைச் சேதப்படுத்திவிட்டு தாமே எம்மிடம் வந்து முறையிடுகின்றனர்.

இவ்வாறான வீதி மின்விளக்குகளை நாம் மாற்றுவதில் அதிக நெருக்கடிகள் உள்ளன என்கிறார்.

இவ்விடயத்தில் பொதுமக்களை விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(எ-12)

# வர்ணப் புகைப்பட அடையாள அட்டைகள்

தென்மராட்சி,டிசெ.6

வர்ணப் புகைப்படத்துடனாக தேசிய அடையாள அட்டைகள் ஆள்பதிவுத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதிக்குப் பின்னர் வர்ணப் புகைப்படத்துடன் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 150 பேருக்கு அட்டைகள் வந்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம் தெரிவித்தார். (எ-117)


## கண்ணீர் அஞ்சலி



(43634)(22-11-15)

எமது பாடசாலை ஆசிரியர்
**பொ.சரவணபவானந்தன்** அவர்களின்
அன்புச் சகோதரி

**திருமதி சிவலிங்கம் ஜெயலக்சுமி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,
நிதி உதவியாளர்,
சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை, நீர்வேலி.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா இராமலிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா இராமலிங்கம் அவர்கள் 04-12-2005 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் இணுவையூர் வைத்தியர் திரு.சு.இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**திரு.இ.அருணகிரிவாசன் (மகன்)**
பதில் அதிபர்
யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

(43624)(26-32-34-16)

### V.S.சிவரட்ணம் J.P. (Whole Island)

*(விலைமதிப்பீட்டாளர், விலை மதிப்பீட்டுத் திணைக்களம், அரச, அரசசார்பற்ற வங்கிகள்)*



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், 235, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட லயன் V.S.சிவரட்ணம் அவர்கள் 03.12.2005 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற V.சிவசுப்பிரமணியம் (முன்னாள் அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)- சிரோன்மணி தம்பதியினரின் புதல்வனும் சுபேந்திராதேவியின் பாசமிகு கணவரும் சுகந்தன் (U.K), சுதர்ஷகா (U.K), சுலோஷன் (Office Employing Service - யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), சுதாகரன் (B.Sc. (IT) - SLIIT), சுலக்ஷன் (A/L 2007 உயிரியல், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சௌமினி (Canada), ரமணகாந்தன் (U.K), பபிதா ஆகியோரின் மாமனாரும் Dr.சிவானந்தராஜா, காலஞ்சென்ற சிவஞானேஸ்வரி, சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி ), Dr.சிவபாலன், சிவதாசன் (பொறியியலாளர்), சிவமனோகரன் (U.K), சிவலோஜனாதேவி (ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற முத்துக்குமாரு (MLT)- வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும் சறோஜினிதேவி (Canada), நந்தினிதேவி (U.K), கோகிலாதேவி (Germany) ஆகியோரின் மைத்துனரும் வத்ஷன், சுபக்ஷனா, பிருந்துவி ஆகியோரின் பேரனுமாவார்.எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2005) நண்பகல் 12 மணிக்கு சுன்னாகத்திலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*0777 149716, 0776 158769*
*டாக்.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* *(43623)(39-32-34-16)*

தகவல்:
**மனைவி,
பிள்ளைகள்.**

### சுப்பிரமணியம் இராசதுரை

வதிரி, கோட்டைத் தெருவைப் பிறப்பிடமாகவும் தற்சமயம் திருகோணமலை பாலை ஊற்றில் வசிப்பவருமாகிய சுப்பிரமணியம் இராசதுரை 03.12.2005 சனிக்கிழமை பாலை ஊற்றில் அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் ஜெயராணியின் அன்புக் கணவரும் கோபி கிருஷ்ணா, பார்த்திபன், பிரதாப், கிருஸிகன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவனேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி, பிறேமாவதி (கனடா), குகதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராசா, ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வதிரி கோட்டைத் தெருவில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோட்டைத் தெரு,
வதிரி.

தகவல்:
**சிவராசா** (மைத்துனர்)
*புகழ் ஸ்ரோஸ், சுன்னாகம்.*

*(43623)(32-34-16)*

### கந்தையா சம்புலிங்கம்



சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சம்புலிங்கம் அவர்கள் 05.12.2005 திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கச்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் (பத்மா) அன்புக் கணவரும் உஷேந்தினி (கைலாச விநாயகர் முன்பள்ளி ஆசிரியை), கஜேந்தினி, ஜெனார்த்தனன் (மாணவன், சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அருளேஸ்வரி, விநாயகலிங்கம் (கனடா), தருமலிங்கம் (மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை), இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலநாயகம் (குவைத்) வரணகுலசிங்கம் (பிருந்தா நகைமாடம், யாழ்ப்பாணம்), திருமதி ஜெயராஜா, ராஜகுலசிங்கம் (ஜேர்மனி), திருமதி சிவலோகநாதன், திருமதி தனபாலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுவீதி,*
*பால்குளம்,*
*கொய்யாத்தோட்டம்.* *(43630)(21-32-34-16)*

தகவல்:
**மனைவி,
பிள்ளைகள்.**

## வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்

# விநாயகர் சஷ்டி உற்சவம்


இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை

காலை: 7 மணி காலைப் பூசை
7.30 மணி சகஸ்கர நாமார்ச்சனை
8.00மணி கலச சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்
10.30 கணபதி ஓமம்
11.30 கலச சங்காபிஷேகம்
12 மணி உச்சிக் காலப் பூஜை
12.30 ஸ்ரீ பஞ்சமுகார்ச்சனை
பி.ப. 4 மணி பிள்ளையார் கதை
4.30 விசேட மேளக்கச்சேரி
மாலை: 5.30 கஜமுகா சூரன் போர்
இரவு: 7.30 ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு விசேட பூஜை

விசேட மேளக்கச்சேரி
திரு மா.சிவசுப்பிரமணியம் குழுவினர்.
நாதஸ்வர இசை அருவிகள்
V.K.பஞ்சமூர்த்தி, R.கேதீஸ்வரன், S.மாக்கையா
உபயம்: அற்புதா றேடிங் கம்பனி
(43647)
(54-15-12)

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
03 . 02 . 1906



மறைவு
05 . 11 . 2005

அமரர்
### பொன்னையா சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர் - தெல்லிப்பழை)

கடந்த் (05.11.2005) சனிக்கிழமை எம்மைவிட்டு பிரிந்த அன்புத் தெய்வம் பொன்னையா சுப்பிரமணியம் அவர்களின் நினைவாக இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

8ஆம் கட்டை, துர்க்காபுரம்,
மல்லாகம்.
(43692)
(25-5411-15)
தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் பாலசிங்கம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் அவர்கள் நேற்று (5.12.2005)திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சின்னப்பிள்ளையின் மகனும், சின்னக்குட்டி - லட்சுமியின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், பரராசசிங்கம், தவமணிதேவி,சரஸ்வதி,அமரர் தனபாலசிங்கம் தபேஸ்வரியின் அன்புச் சகோதரனும், பாலச்சந்திரன் (பாபு), உதயபாலன்(மோகன்), ரஞ்சன்(வரதன்), ரஞ்சினி, காலஞ்சென்ற உதயகுமார் (கண்ணன்), மற்றும் சுதா (ஜெயா), வாகேஸ்வரி(சிவா), பிரபு(தீபன்), ஆகியோரின் அன்புத்தகப்பனாரும், ஜெயந்தி, திருமகள், கருணா அமரர் விக்கினேஸ்வரன், ராஜேந்திரன் (ராஜா), விக்கினேஸ்வரன் (விக்கி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசன்னா, பிரசாந், தனுசன், தர்சாஜினி, திவாசினி, கர்சா, ரஜீவ், ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.12.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(43649)
(54-12-15)
தகவல்:-
குடும்பத்தினர்

### பிரான்சிஸ் பாக்கியநாதன்



குருநகரைப்பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பிரான்சிஸ் பாக்கியநாதன் அவர்கள் நேற்று (05.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ்-ஞானம்மா தம்பதியரின் இளையமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு அல்லைப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லைப்பிட்டி.
(43641)
(54-12-15)
தகவல்:
செல்லத்துரை ஜெயா.

## குடும்ப விவரப் படிவம் பூர்த்தி செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.6

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் காணாமற்போனோரின் குடும்பங்கள் தமது குடும்ப விவரம் தொடர்பான படிவங்களை அறவழிப் போராட்டக் குழுவின் அலுவலகத்துக்கு வந்து பூர்த்தி செய்து கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

## தென்மராட்சி வி.கழகங்களுக்கு

தென்மராட்சி,டிசெ.6

தென்மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் மு.ப. 10.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

கழகங்கள் மீள்புனரமைப்பு, பதிவிலக்கம் வழங்கல்,விளையாட்டு உபகரணங்கள் வழங்கல் போன்றவை கலந்துரையாடப்படவுள்ளதாகவும்-

பிரதேசத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ - 117)


**A/L Day**
ஆரம்பம் 07.12.2005 புதன் மாலை 5.30 (ப.நே)
புவியியல் செய்முறை
ஆசிரியர்: குமரன்
D. C. M
பருத்தித்துறை வீதி,யாழ்ப்பாணம்.
(43644)
(54-15-12)


## இலங்கை மின்சார சபை முக்கிய அறிவித்தல்

இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்கும் கூல் எயர் நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகளில் ஏற்பட்டுள்ள திருத்த வேலை காரணமாக மாலை நேரங்களில் சுழற்சி முறையில் தற்போது மின்வெட்டு அமுலாக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கிறது. இதனால் மின் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக மிகவும் வருந்துகிறோம்.

மின்பொறியியலாளர்,
யாழ்.பிரதேசம்.
(சி-46642) (25)

## மரண அறிவித்தல்

### திருமதி ஏகாம்பரம் மாணிக்கம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏகாம்பரம் மாணிக்கம் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஏகாம்பரத்தின் அன்பு மனைவியும், நித்தியானந்தம் அவர்களின் பாசமிகு தாயாரும் அமிர்தவல்லியின்(மலர்) அன்பு மாமியாரும் கோபிநாத்தின் (U.K) பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணிக்கு நடைபெற்று, சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.
(சி-46643)
(54-15-12)
தகவல்:
ஏ. நித்தியானந்தம்
(மகன்)


**மனோகரா யாழ்ப்பாணம்**



இளைய தளபதி விஜய் வெடிக்கும்
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30
யாழ். மாவட்டத்தில்
முதல் முறையாக
சிவகாசி

**ராஜா யாழ்ப்பாணம்**

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.
சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளையதிலகம் பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல், வினித், விஜயகுமார் நடித்த
சந்திரமுகி காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30.
(46404)

**நாகம்ஸ் சுன்னாகம்**

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
அர்ஜுன், நமிதா,
வடிவேல் நடித்த
ஆணை



தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00


## பிற்போடப்பட்டுள்ளது

'தேவை நாடும் மகளிர் அமைப்பும்' UNHCRஉம் இணைந்து 06.12.2005, 7.12.2005 ஆகிய திகதிகளில் 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட மாதர் சங்கங்களுக்கான பால், பால்நிலை அடிப்படையிலான பெண்கள் மேம்பாட்டுப் பயிற்சிப்பட்டறை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

இணை இணைப்பாளர்,
தேவைநாடும் மகளிர் அமைப்பு,
22/1, றக்காலேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(43656)
(25-54-15-12)

## மரண அறிவித்தல்கள்

### நாகலிங்கம் கந்தசாமி (மகாராசா)



(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், யாழ். போதனா வைத்தியசாலை)

அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தசாமி அவர்கள் நேற்று (05.12.2005) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் றோசம்மாவின் மூத்த மகனும் காலஞ்சென்ற பகவதியின் அன்புக்கணவரும் ஜசோதரா, ரவீந்திரன் (கனடா), அனுஷா(லண்டன்) சுமித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசேந்திரம் (கிராமசேவையாளர், வியாபாரி மூலை) ஹரிஹரன் (கனடா), சந்திரகுமார் (லண்டன்), லலிதாதேவி ஆகியோரின் மாமனாரும் சிந்துஜா, கிரிசிகா, பிரவீனா, பிரவீன், தனுஷா, மதுஷா, ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற செல்லக்கண்டு, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலிவடக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
(43701)
(54-15-12)
தகவல்:
க.ரவீந்திரன் (மகன்)

### லயன் கிருஷ்ணபிள்ளை துரைராஜா



(ஓய்வுபெற்ற பிரதம பொறியியலாளர் R.D.D)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் 287, பலாலி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் கி.துரைராஜா அவர்கள் (04.12.2005) அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை-தங்கம்மாவின் மகனும், காலஞ்சென்ற A.N.K. பொன்னுத்துரைமற்றும் மங்கையற்கரசியின் மருமகனும் பாலசரஸ்வதியின் அன்பு கணவரும், கலாநிதி மங்களகுமாரி (கனடா), ராஜ்குமார் (லண்டன்), பாலகுமாரி (ஆசிரியை, இந்துமகளிர் கல்லூரி, வெள்ளவத்தை) ஆகியோரின் தந்தையும், கலாநிதி ஜெயநாதன் (லண்டன்), செல்வநாதன் (பொறியியலாளர், R.D.A) ஆகியோரின் மாமனாரும் சிவரம்யா (Methodist College Colombo-3) வித்யா (கனடா),கிருஷ்ணியா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

T.P.: 021-2223216
(43643)
(54-15-12)
தகவல்:
குடும்பத்தினர்.

### ஆசீர்வாதம் மரியதாஸ் (பொன்னு)



மாதனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் மரியதாஸ் 04.12.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மரியப்பிள்ளையின் (நல்லம்மா) அன்புக்கணவரும் பாஸ்கரன், பாமா (லண்டன்), ஆனந்தராசா (லண்டன்), தேவராசா (சுவிஸ்), செல்வமலர், (பிரேமா-சுவிஸ்), ஜெயராசா (லண்டன்),நேசமலர் ஆகியோரின் அன்புத்தந்தையும், புனிதமலர், யோகமூர்த்தி (லண்டன்), பாமா (லண்டன்), விஜயகுமாரி (சுவிஸ்), யோசேப் (சுவிஸ்), மேரியா (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபன், பிரதீபா, தர்சினி, தர்சா, நிறஞ்சா, நிசாந்தினி, சுரேந்தினி, சாளினி (லண்டன்), விதுஷா (லண்டன்), திவ்வியா, திவ்வியன் (சுவிஸ்), நிரோசா, பானுசா, பாலதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பருத்தித்துறை அந்தோனியார் ஆலயத்தில் நாளை (07.12.2005) புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக தும்பளை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாதனை, புலோலி வடக்கு,
பருத்தித்துறை.
(43627)
(54-15-12)
தகவல்:
நல்லம்மா (மனைவி),
பாஸ்கரன் (மகன்).

### செல்லத்துரை சங்கரலிங்கம்



(ஓய்வு பெற்ற இலங்கை வங்கி உதவி முகாமையாளர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சங்கரலிங்கம் நேற்று (05.12.2005) திங்கட்கிழமை நண்பகல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - பாறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியரின் அருமை மருமகனும், இந்திராதேவியின் அன்புக்கணவரும், Dr.சுதாஹரி(லண்டன்), சுதேஸ்(லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.குணத்திலகன்(லண்டன்), அவர்களின் அன்பு மாமனாரும், லக்ஷனா, நந்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும், பிரசாந்தனின்(யா/யாழ்ப்பாணக்கல்லூரி மாணவன்),பெரியதந்தையும் காலஞ்சென்றவர்களான தெய்வநாயகி, பஞ்சலிங்கம்,சவுந்தரநாயகி, குணநாயகி, செல்வநாயகி, தவநாயகி, தையல்நாயகி, லோகநாயகி, ஆகியோரின் சகோதரனும், கார்த்திகேயன்,விமலாதேவி, முருகேயன், காலஞ்சென்ற பாலாதேவி, குமரேயன், காலஞ்சென்ற காங்கேயன், அகிலாண்டதேவி,சந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது ஆன்ம ஈடேற்றக்கிரியைகள் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாற்று இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானசம்பந்தர் வீதி,
வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.
(43627)
(54-15-12)
தகவல்:
இந்திராதேவி (மனைவி)

## புலிகள்-இராணுவத்தினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்த சூனியப் பிரதேசத்தில் இடம்பெறும் எனக் கண்காணிப்புக் குழுவினரால் புலிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இதற்கமைய, சந்திப்புக்காக புலிகளின் உயர்மட்டக் குழு நேற்று மாலை 3.45 மணிக்கு முகமாலையில் புலிகளின் எல்லைப் பிரதேசம் வரை வந்து காத்திருந்தது. இக்குழுவில் புலிகளின் யாழ். பிரதேச பொறுப்பாளர்களான சி.இளம்பரிதி மற்றும் பாலையா, சுதாஸ், இனியவன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

அரச படைகளின் தரப்பில் யாழ். இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையிலான குழுவினர் பங்கு பற்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இலங்கை அரசின் சமாதானச் செயலகத்திடமிருந்து மேற்படி கலந்துரையாடலின்போது அரச படையினர் பின்பற்றவேண்டிய நடைமுறைகள், நிகழ்ச்சி நிரல் போன்றவை பற்றி உரிய தகவல் கிடைப்பதில் தாமதம் இருப்பதால் சந்திப்பு தாமதமாக ஆரம்பிக்கும் என்று கண்காணிப்புக் குழு மூலம் புலிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனால் புலிகளின் பிரதிநிதிகள் காத்திருந்தனர். எனினும் சற்று நேரம் கழித்து சந்திப்பு இரத்து செய்யப்படுவதாக புலிகளுக்கு தெரிவிக்கப்பட்டதால் அவர்கள் திரும்பிச்சென்றனர்.

இது குறித்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதியிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

''எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்புக்கு இணங்கியிருந்தோம். ஒட்டுப்படைக் குழுக்களும், புலனாய்வுப் பிரிவினரும் எமது மக்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீதான தாக்கு தல்களை நிறுத்தாவிடில் இயல்பு நிலை ஏற்படாது என இச்சந்திப்பின் போது படைத்தரப் புக்குச் சுட்டிக் காட்டக் காத்திருந்தோம்.

''மக்கள் மீதான அராஜகங்களுக்கு எதிராக மக்களே கொதித்து எழுந்துள்ளனர். அதுவே இன்றைய நிலைமை. அதை படைத்தரப்புக்குச் சுட்டிக்காட்ட இருந்தோம்.

''கோண்டாவிலில் இடம் பெற்றதாகக் கூறப்படும் தாக்குதல் குறித்து கண்காணிப்புக் குழுவினர் எங்களிடம் கேட்டனர். அச் சம்பவத்துக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை என்பதை கண்காணிப்புக் குழுவிடம் சுட்டிக் காட்டினோம். குடாநாட்டில் அரச கட்டுப்பாட் டுப் பிரதேசங்களில் இருந்து எங்களது உறுப்பினர்களை நாங்கள் வாபஸ் பெற்றுவிட்டோம். படைகளின் அராஜகங்களுக்கு மக்களே பதிலடி கொடுக்கும் நிலைமைதான் அங்குள் ளது என்பதைக் கண்காணிப்புக் குழுவிற்கு விளக்கினோம்.''- என்றார் அவர்.

மேற்படி சந்திப்பு இரத்தானது குறித்து கண் காணிப்புக்குழு உறுப்பினர் ஒருவரிடம் கேட்டபோது ''சந்திப்பு இரத்தாகவில்லை; ஒத்தி வைக்கப்பட்டுள்ளது'' என்று கூறினார் அவர். (க-3-6-7)

## குடாநாட்டில் தமது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்படுகின்றது.

இதனையடுத்து அதிகாலை வேளையில் வீதிரோந்து, வீதிச்சோதனை நடவடிக்கைகளை இராணுவத்தினர் தீவிரப்படுத்தியுள்ளனர்.

போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தா வதற்கு முன்னர் இராணுவத்தினர் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். மீண்டும் இப்போது இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடைந்ததையடுத்து இந்த நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதிகாலைவேளை பயிற்சி நடவடிக்கைகளையும் படையினர் ஆரம்பித்துள்ளனர். அத்துடன் வீதிகளில் உள்ள இராணுவக் காவலரண்கள், இராணுவ முகாம்கள் ஆகியவை மண்மூடைகள் அடுக்கப்பட்டுப் பலப்படுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் தென் மேற்கில் மானிப்பாய், பண்டத்தரிப்பு, இளவாலை, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். படையினரின் மோட்டார் சைக்கிள் பிரிவினரும் தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடுகளையடுத்து பொதுமக்கள் பெரும் அச்சத்துடன் காணப்படுகின்றனர். (க-6)

## சிங்கள மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக துணைவேந்தர், பீடாதிபதி ஆகியோருடன் தாங்கள் கலந்துரையாடினர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்றிரவு பல்கலைக்கழக மாணவர் விடுதியில் சக தமிழ் மாணவர்களுடனும் அவர்கள் கலந்துரையாடினர்.

அப்போது சிங்கள மாணவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

மீண்டும் யுத்தம் நிகழலாம் என்று தெற்கில் பரவலான கருத்து நிலவுவதால் நாங்கள் தொடர்ந்தும் இங்கு கல்வி கற்பதை எமது பெற்றோர்கள் விரும்பவில்லை. இதனால், தெற்கில் உள்ள வேறு பல்கலைக் கழகங்களுக்கு இடமாற்றம்பெற முயற்சிக்கிறோம். இங்கிருந்த காலத்தில் சக தமிழ் மாணவர்கள் மிகவும் நெருக்கமாக சகோதர உணர்வுடன் பழகியதை மறக்கமுடியாது - என்று கூறினார். (த)

வடமராட்சியில்...
ENGLISH MEDIUM CLASSES
Grade 6, 7, 8, 9 Classes
திரு. ட.ஈஸ்வரநாதன் B.Sc(Agric) Dip in.ed.
தலைமையிலான ஆசிரியர் குழு
திரு. ரவீன்ஸ் சுரவெட்டி, திரு.A அருளானந்தம் B.Sc(Hons) Dip in.ed.
ஆரம்ப திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும்.
146, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
தொடர்புகளுக்கு: T.P: 2263321
(43622) (25-13-15)

LONDON ENGLISH COLLEGE
NO:105, Arasady Road, Jaffna.
T.P: 021-2225889, 0777252180
BCNS
No: 229A, Mitcham Road, Tooting, London, SW 17910 UK

IELTS
ஆரம்பம்: 10.12.2005
✳ வெளிநாடுகளில் உயர்கல்வியைத் தொடரவும்.
✳ ஆங்கில அறிவை விருத்தி செய்யவும்.
✳ வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெறவும்.
WEEKEND CLASSES முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

## ஐ.தே.க.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தல் படுதோல்வியல்ல வென்பதால் ரணிலே கட்சியின் தலைமைப் பொறுப்புக்களைத் தொடர்ந்து வகிக்க வேண்டுமென மற்றுமொரு சாராரும் - கருதுகின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## மாற்று ஏற்பாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும் மற்றும் நான்கு விவசாயிகளும் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிஸ்ஸங்க உடலகம, நிமால் திஸநாயக்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் இதேபோன்ற விடயம் குறித்து வாய்ப்புகளைத் தெரிவிக்குமாறு யாழ். அரச அதிபரைக் கோரியிருந்த உயர்நீதி மன்றம், இப்போது முழுமையான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அரச அதிபரைப் பணித்திருக்கின்றது.வழக்கு பெப்ரவரி 27ஆம் திகதி ஒத்தி வைக்கப்பட்டது. (க)

## ராணுவ விலகலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய மாணவர்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகித்த இராணுவத்தின் மிலேச்சத்தனமான செயல் மாணவர்களை ஆத்திரமூட்டுவதோடு எதிர்காலத்தில் மாணவர்களுடைய பாதுகாப்பிற்கும் கேள்விக்குறியாக அமைகிறது.

இரா ணுவத்தினரின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக மாணவர்கள் தொடர்ச்சியான வலியுறுத்தல்களை விடுத்தும், போராட்டங்களை நடத்தியும் தங்களைச் சுதந்திரமாகக் கற்கவிடுமாறு கோரினர்.

இதன்போது நடந்த மிலேச்சத்தனமான நிகழ்வு மாணவர்கள் அமைதிப் போராட்டம் நடத்துவதில் பிரியோசனம் இல்லை என்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

இனிவரும் நாள்களில் மாணவர்களாகிய நாங்கள் தொடர்ச்சியாக மறியற்போராட்டங்களை குடாநாடு எங்கும் விஸ்தரித்து எம்மீதான ஆக்கிரமிப்பினை உடைத்தெறிவோம் என உறுதிகொண்டு எமது போராட்டத்தினைத் தீவிரப்படுத்தவுள்ளோம்.

எமது பாடசாலைகளை ஆக்கிரமித்திருக்கும், அண்மித்திருக்கும் இராணுவ முகாம்கள், காவலரண்கள் அகற்றப்படுவதோடு, அச்சுறுத்தல்கள் எவையுமற்ற சுதந்திரமான கல்விக்கு சிங்கள அரசும் இராணுவமும் வழிவிடல் வேண்டும்.

இந்தக் கோரிக்கையோடு வடமராட்சிப் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை எமது போராட்டத்தினை ஆரம்பிக்கின்றோம். எமது பகிரங்கக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு இன்று மாலைக்கிடையில் சரியான பதிலை இராணுவத் தரப்பு தர மறுக்குமானால் அடுத்துவரும் நாள்களில் மாணவர்களாகிய நாங்கள் எமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை ஏனைய பிரதேச மாணவர்களையும் ஒன்றிணைத்து கல்விச் செயற்பாடுகள், அரச பணிகள் என்பவற்றினை முடக்கி போராடுவோம் என்பதனை வலியுறுத்திக் கூறுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

வணிகக்கல்வி
பகுதி II
A/L 2007
முகாமைத்துவம்
ஆசிரியர்
திரு.V.முரளி B.BA. (F.M.Spl)
ஆரம்பம் 7.12.2005
4.30 p.m.
விக்னா கல்வி நிறுவனம்
(43638) (25-13-15)

கணினிக் கருத்தரங்கு
விடயம்:- தரம் 10 மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பம் (ICT)
காலம் :- 10-12-2005 (சனிக்கிழமை)
8.30 a.m , 1.30 p.m க்கு அமர்வுகள்
இடம் :- C.B கணினி நிறுவனம், கோண்டாவில்.
2006ம் ஆண்டு தரம் பத்திற்குச் செல்லும் மாணவர்களுக்கு, அரசாங்கம் தகவல் தொழில்நுட்பம் என்னும் பாடத்தை அறிமுகம் செய்துள்ளது. எனவே அதற்கான கருத்தரங்கினை நாம் நடத்த உள்ளோம். அனைத்து மாணவர்களும் கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.
கருத்தரங்கில் பங்குபற்ற விருப்பமானவர்கள் முன்கூட்டியே பதிவு செய்து கொள்வும்.
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

10 ஆவது ஆண்டில்...
எவைற் கல்வி நிறுவனம்
147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கல்வியாண்டு 2006
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் 12.12.2005
திங்கள் பி.ப. 3 மணி
அனுமதிகளை டிசெம்பர் 10 இல் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
(43572) (25-13-15)

## ஞானக்கோன் விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் நீண்ட பல மாதங்களாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஆஸ்திரேலியப் பிரஜையான சாள்ஸ் ஞானக்கோனை நீதிமன்றில் ஆஜர்செய்து விடுவிக்குமாறு கோரி ஆள்கொணர்வு•மனு ஒன்று ஞானக்கோனின் நலனில் அக்கறையுள்ள மற்றொரு ஆஸ்திரேலியரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று நீதியரசர்கள் எஸ்.ஐ. இமாம், ரஞ்சித் சில்வா ஆகியோர் முன்னிலை யில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே, அரசின் சார்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மேற்படி ஞானக்கோனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி சட்டமா அதிபர் சம்பந்தப்பட்ட புலனாய்வாளர்களைப் பணித்திருக்கின்றார் என்ற தகவலை நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட மனுதாரர் தரப்பு சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, தமது கட்சிக் காரரை விடுவிக்க அரசுத்தரப்பு முடிவு செய்திருப்பதால் தாங்கள் தாக்கல் செய்த ஆள் கொணர்வு மனுவைத் தாங்கள் வாபஸ் பெறுகின்றார்கள் என்று தெரிவித்தார். அதை ஏற்றுக்கொண்டு அதற்கு அனுமதி அளித்தது நீதிமன்றம்.

(க)

## மரண அறிவித்தல்கள்

### இராஜதுங்கம் சிவநேசராசா

காலஞ்சென்ற இராஜதுங்கம் - குழந்தைநாச்சள் தம்பதியரின் புத்திரன் இராஜதுங்கம் சிவநேசராசா (முன்னாள் ஆசிரியர்- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, புத்தூர் சிறிசோமாஸ்கந்தா கல்லூரி) நேற்று (05.12.2005) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மநாயகி மற்றும் மகேந்திரன் (முன்னாள் அதிபர் - யாழ்ப்பாணம், கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் **(Accountant)** மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று,

அவரது பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப் படும்.

*தகவல்:*
***இ.மகேந்திரன்*** *(சகோதரன்),*
*முன்னாள் அதிபர்,*
*யாழ்ப்பாணம்,*
*கொக்குவில் இந்துக் கல்லூரி.*

*24, இந்துக்கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (43705) (25-13-15)

### கணபதிப்பிள்ளை தாமு

எழுதுமட்டுவாளைச் சேர்ந்தவரும் கிளான், துன்னாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தாமு அவர்கள் நேற்று (5.12.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சித்த மருத்துவர்) இராமலிங்கம், கோபாலபிள்ளை, சற்குணதேவி, தர்மராசா, செல்வராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சீதேவி, காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (எழுதுமட்டுவாள் சிவன்கோயில் தர்மகர்த்தா) காலஞ்சென்ற பொன்னையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கிளான் துன்னாலையில் இன்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-46644) (25-13-15) தகவல்:-
*கிளான், துன்னாலை.* **தா.கோபாலபிள்ளை** *(மகன்)*

### செல்வி நேசரத்தினம் இராமச்சந்திரன்



கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், 34,குளப்பிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நேசரத்தினம் இராமச்சந்திரன் அவர்கள் நேற்று (05.12.2005) திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்து விட்டார்.


அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரன் (சந்திரா) - இரத்தினம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஸ்ரீநிவாசன் மற்றும் திருமதி இரதிதேவி பூதத்தம்பி, திருமதி கமலா இராஜசுந்தரம், திருமதி திருமகள் பத்மநாதன், பாஸ்கரன், திருமதி தேவகி திலகநாதன்,இராகுலன், திருமதி சுகந்தி விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 34, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் இல்லத்தில் இன்று (6.12.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
*34, குளப்பிட்டி ஒழுங்கை,* **ப.பகீரதன், இ.முரளீதரன்.**
*கொக்குவில் கிழக்கு.* (சி-46641) (25-13-15) (பெறாமக்கள்)

### சண்முகம் குமாரசாமி (பத்தர்)



நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பை பிறப்பிடமாகவும் கேசவில், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் குமாரசாமி அவர்கள் 05.12.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**கு.தணிகாசலம்**
மகன் (கிருஷ்ணா)
(43706) (25-13-15)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.